# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2005, பங்குனி 18உ (31-3-74) ஞாயிறு மார்ச் 31 ரபி:அவ் 6 - புத்தகம் 27 இதழ்-3


## ஒட்டி நின்று சாதிக்க முடியாததை வெட்டி நின்று சாதித்தார் ஜெயக்கொடி!

வவுனியாவில் காரை நகர் இளைஞர்களுக்காக ஓர் கூட்டுப்பண்ணை அமைக்கப் போவதாக ஜெரக்கரித்துத் திரிந்தார் ஆளுங்கட்சியுடன் ஒட்டியிருக்கும் வட்டுக்கோட்டை பா. உ. ஆ. தியாகராசா. இது சம்பந்தமாக பத்திரிகைகளுக்கு அறிக்கைக்குமேல் அறிக்கை விடுத்து வந்தார் சில காலமாக; பகலவன் முன்னல் பனி மறைந்ததுபோல இப்போது அதுபற்றிய பேச்சும் இல்லை மூச்சும்இல்லை. ஆளுங்கட்சியுடன் ஒட்டி நின்று அமைச்சர்களுக்கு ஆலவட்டம் வீசியும் தியாகராசாவால் சாதிக்கமுடியாத அந்த விஷயத்தை அரசாங்கத்துடன் வெட்டி நின்று தமிழின உரிமைக்காகப் போராடும் தமிழர் கூட்டணி பா. உ. திரு. அ. ஜெயக்கொடி சாதித்துவிட்டார்.



வவுனியாவில் இளைஞர் கூட்டுறவுப்பண்ணை ஒன்றை நிறுவுவதற்கு நூறு தமிழ் இளைஞர்களை பொறுக்கி யெடுப்பது சம்பந்தமாக உடுப்பிட்டி பா. உ. திரு. ஜெயக்கொடியின் ஆலோசனையை யாழ் அரசாங்க அதிபரின் கட்டளையின் பேரில், வடமராட்சி தெற்கு, மேற்கு பகுதிகளின்

(7-ம் பக்கம் பார்க்க)

## விநோதனுக்கு கல்தா!

சட்டக்கல்லூரித் தமிழ் மன்றத் தலைவராகவிருந்த திரு. கு. விநோதனுக்கெதிராக 27-3-74ல் நடைபெற்ற மன்றக்கூட்டத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

திரு. விநோதன் கடந்த ஆண்டு சிங்கள வாக்கு பலத்தால் ஆட்சிக்கு வந்ததும், அவரது பதவிக்காலம் கடந்த ஆண்டு முடிந்தும் இதுநாள்வரை தேர்தலை நடாத்தாது இழுத்தடித்து பதவியில் ஒட்டிக்கொண்டிருந்ததும் தெரிந்ததே!

## குமாரசூரியர் அண்ணைச்சி! ‘கொமிஷன்’ சேதிஎன்னைச்சு?

## ‘பட்டைநாமம்’ போட்டாச்சு! பதவி இன்னும் உனக்கேன் ஐயா!!

தபாலமைச்சர் செல்லையா குமாரசூரியர் தமிழ் மக்களுக்கு திருப்பித்திருப்பி அளித்து வந்த உறுதிமொழியொன்று அரசாங்கத்தினல் தூக்கியெறியப்பட்டுவிட்டது.

தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதி நாளன்று நடைபெற்ற பொலீஸ் தாக்குதல் பற்றிவிசாரிக்க அரசாங்கம் நிச்சயமாக நீதி விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்கும் என்று திரு. குமாரசூரியர் திட்டவட்டமாக

(7-ம் பக்கம் பார்க்க)

## ‘டிப்புளோமோ’ கல்வியிலும் இனப்பாகுபாடு! 500 பேருக்கு 20 பேரே தமிழர்கள்!

‘பல்கலைக் கழகத்துக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்குக் கையாளப்படும் முறைகள் இன்னும் மர்மமாகத்தான் இருக்கின்றன. அந்த மர்மத்தை விடுவிப்பது அரசாங்கத்தின் கடமையாகும். தரப்படுத்தப்பட்ட புள்ளிகள் அடிப்படையில்

### பல்கலைக்கழக அனுமதியிலும் பாரபட்சம் தொடர்கிறது!

திறமைவாய்ந்த மாணவர்கள் 30விதமானேர் மாத்திரம் தெரிவு செய்யப்படுவர் என்றும், எஞ்சியவர்கள் பிரதேச ரீதியில் எடுக்கப்படுவர் என்றும் அரசியர் முன்பு அறிவித்திருந்தனர்;

‘இரு அம்சங்களை இவ்விடயத்தில் மக்கள் அறியவேண்டும்:-

(அ) இந்த முறையை அரசினர் ஏற்றுக்கொண்டிருப்பதால் பல்கலைக்கழக மாணவர்கள் முழுத்தொகையினரையும் திறமை அடிப்படையில் தெரிவு செய்வதில்லை என்பதை ஏற்றுக்கொண்டனர். “உயர் கல்வி எல்லோருக்கும் திறமை அடிப்படையில் சமமாகக் கிடைக்கவேண்டும்.” என்னும் சர்வதேச சபையின் மனித உரிமை சாசனத்தில் 26(1)ம் பந்தியில் காணப்படும் பிரகடனத்துக்கு இது முழுதும் முரண்பாடானது.

தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களிலும் பார்க்கக்கூடிய புள்ளிகளைப் பெற வேண்டியவர்களாக இருக்கின்றனர். உதாரணமாக, பாஸ், விசேஷ, அதி விசேஷ சித்திக்கு தமிழ் மாணவர்கள் முறையே 50%, 60%, 70% புள்ளிகளை எடுக்கவேண்டியிருக்க, சிங்கள மாணவர்கள் முறையே

(7-ம் பக்கம் பார்க்க)

## பெரியவர் பிறந்த நாள் விழா!

தமிழர் தந்தை பெரியவர் செல்வாவின் 76வது பிறந்த நாள் விழா 31.3.74ல் யாழ்ப்பாணத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இதேசமயம், சென்னை பெரியார் திடலிலும் உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் தந்தை செல்வாவின் பிறந்த நாள் விழா சிறப்புற நடைபெறுகிறது.

## சிங்கள ஏழைகளைப்பற்றியே அவருக்கு அக்கறை!

‘இலங்கைப் பிரஜைகள் 25 சதத்திற்கும் 50 சதத்திற்கும் அன்று தமது காணிகளை தொண்டமான்போன்றோரிடம் கையளித்தார்கள். அந்தக் காணிகளையே நான் மீட்டு வருகிறேன்... நிச்சயமாக இந்நாட்டு சிங்கள ஏழைகளிடமிருந்து பறிக்கப்பட்ட காணிகளைப் படிப்படியாக அவர்களின் கைகளில் ஒப்படைத்தே தீருவேன்.”

—ருவான்வெல்ல இராசசிங்க மத்திய மகாவித்தியாலய திடலில் நடைபெற்ற கூட்டத்தில் காணியமைச்சர் கொப்பேகடுவ பேசியது—

—(வீரகேசரி 27-3-74)



## பல்லாண்டு வாழ்க!



வாழ்க நீ செல்வா! இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டு
பாழ்பட்டு நிற்குமெங்கள்
[illegible] தமிழ் சமூகம் தன்னை
வாழ்விக்க வந்த ‘தந்தை’
[illegible] வாழ்க வாழ்க


## யாழ்ப்பாணத் தமிழருக்குக் கண்டியில் கூப்பன் கொடுக்க மறுப்பு!

பரம்பரையாகவே இலங்கையில் பிறந்த யாழ்ப்பாணத் தமிழனொருவரது குடும்பத்திற்கு கண்டிப் பகுதியில் கூப்பன் வழங்க மறுக்கப்பட்டது;

அல்வாய்ப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இத் தமிழ் மகன் தனக்கு ஏற்பட்ட துரோகச் செயல் பற்றிக் கண்டி — அரசாங்க அதிபருக்கும், பிரதமர் — சிறிமாவோவிற்கும் ஆட்சேபனை மனு ஒன்றை அனுப்பி வைத்ததுடன், கண்டி மாவட்ட நீதி மன்றத்திலும் சம்பந்தப்பட்ட காரியாதிகாரிக்கு எதிராக ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அவ் வழக்கின் மனுவில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:-

நானும், எனது மனைவியும் இலங்கைப் பிரஜைகளாவோம்; எங்களுக்கு மூன்று பிள்ளைகளுண்டு. எனவே எங்களின் ஐந்து கூப்பன்களையும் இலாபத்திலிருந்து, கண்டித் தொகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கடைக்கு மாற்ற அனுமதி மறுக்கப்பட்டது. இதுபற்றி சம்பந்தப்பட்ட காரியாதிகாரியுடன் தொடர்பு கொண்டபோது, அவர் எங்களுக்கு இந்திய வம்சாவளியினருக்குக் கொடுக்கப்படும் கூப்பனை மட்டுமே தரமுடியும் என்று கூறிவிட்டார்;

எனக்கும் எனது மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் இலங்

(7-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# (8)
# வித்தியானந்தனின் வீரமுழக்கம்!




தமிழ்மொழியைத் தழுவி—தமிழ்மொழி, கலாசாரம், வரலாறு சம்பந்தமாக நடைபெறுகின்ற ஒரு மாநாடு — தமிழல்லாத வேற்றுமொழியில் நடைபெறலாமா? இப்படி நடைபெறுவதை மொழிப்பற்றும், உணர்வும் உள்ள தமிழர்கள் அனுமதித்திடலாமா?

இந்தக் கேள்வி தமிழ்மீது பற்றும் பாசமும்கொண்ட எண்ணற்ற தமிழர்களின் நெஞ்சங்களில் நீண்டகாலமாகவே அரித்துக்கொண்டிருந்த ஒரு கேள்வியாகும்!

ஏனெனில் 1964ம் ஆண்டு புதுடெல்லியில் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தொடங்கப்பட்ட பின்னர்—அது மூன்று அனைத்துலக மாநாடுகளை நடத்திவிட்டபோதிலும், அந்த மாநாடுகளில் எல்லாம் தமிழுக்கு முதன்மை இடமும், முக்கிய இடமும் கொடுக்கப்படவில்லையென்றும், ஆங்கிலமொழிக்கே முதலிடம் தரப்பட்டதாகவும் ஒரு



சிலம்புச் செல்வர் ம. பொ. சி.

பெரும் மனக்குறை தமிழர்களிடம் இருந்துவந்திருக்கிறது.

மலேசியாவிலும், சென்னையிலும், பாரிஸிலும் நடைபெற்ற மாநாடுகளின்போது —தமிழுக்கு எவ்வளவு தூரம் இடந்தரப்பட்டது—தமிழைவிட ஆங்கிலமே உண்மையிலேயே மேலோங்கி நின்றதா — என்பன போன்ற கேள்விகளுக்கு விடையளிக்கக்கூடிய நிலையில் நான் இல்லை!

ஏனெனில் இந்த மாநாடுகளில் நான் கலந்துகொண்டவன் அல்ல.

எனவே நேரில் பார்க்காத ஒன்றைப் பற்றி எப்படி என்னால் கருத்துக்கூறமுடியும்?

ஆனால் மூன்றாவது மாநாடு பாரிஸ் திருநகரில் நடந்து முடிந்த பின்னர் — அம்மாநாடு பற்றி சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தம்முடைய 'செங்கோல்' இதழில் பற்றி தொடர்ச்சியாகச் சில விமர்சனக் கட்டுரைகளை எழுதியிருந்தார்கள்!

அந்தக்கட்டுரையில், தமிழ் மாநாட்டில் தமிழுக்கு இடம் தராது ஆங்கிலத்தையே கட்டியழுததாக மாநாட்டு அமைப்பாளர்கள் மீது கடுமையாக சாடியிருந்தார்கள்!

தமிழ் ஒதுக்கப்படுவதை— புறக்கணிக்கப்படுவதை— காணும்போதெல்லாம் துடித்தெழுகிற மீசையல்லவா ம. பொ. சி.யின் மீசை?

தமிழ் மாநாடு, தமிழில்தான் நடைபெறவேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியதற்காக ம. பொ. சி.யை சிலர் "குறுகிய நோக்கர்" என்று தூற்றவும் பின்நிற்கவில்லை!

தமிழ்வாழ, வளர உழைப்பவர்களை தூற்றல்களும் ஏசல்களும் இழிமொழிகளும் என்ன செய்யமுடியும்?

அந்தக் கட்டுரையில் இறுதியாக, ஒன்றே ஒன்றை ம. பொ. சி. அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள்;

ஈழத்தமிழர்கள் தமிழ் மீது கொண்டுள்ள ஆழமான அன்பையும் பற்றையும் அறிந்திருந்த ம. பொ. சி. அவர்கள்பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்கள்;

"நான்காவது உலகத் தமிழ் மாநாடு இலங்கையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது; இலங்கையில் நடைபெறும் நான்காவது மாநாடு ஆங்கிலத்தில் நடைபெறுமானால் —அதை ஈழத்தமிழர்கள் ஒருபோதுமே அனுமதித்திடமாட்டார்கள்; தமிழ் பற்றுமிக்க ஈழத்தமிழர்கள், கிளர்ச்சியும், குழப்பமும் செய்தாவது, மாநாடு தமிழில் நடைபெறவேண்டிய ஒரு நிலையை நிச்சயம் தோற்றுவிப்பார்கள்!"

—இவ்வாறுகசிலம்புச்செல்வர் அவர்கள் 1970ம் ஆண்டு தமது செங்கோல் இதழில் குறிப்பிட்டிருந்தார்கள்;

ஈழத் தமிழர்களின் தமிழ்மொழி அபிமானம் மீது ஆழமான நம்பிக்கை வைத்து இவ்வாறாக எழுதியிருந்த சிலம்புச் செல்வர் அவர்களுக்கு, நான்காவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பு இல்லாமற் போய்விட்டது.

அவர் மாநாட்டுக்கு வந்திருந்தாரென்றால்— எவ்வித கிளர்ச்சியும், போராட்டமும் தேவைப்படாமலே— நான்காவது உலகத் தமிழ் மாநாட்டில்—தமிழுக்கே முக்கிய முதன்மை இடம் தரப்பட்டதை நேரடியாகக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்திருப்பார்! ஈழத்தமிழர்களை ஆரத்தழுவிக்கொண்டிருப்பார்!

ஆம், தமிழாய்ந்த தமிழ்ப் புலவன்— இனப்பற்றும் மொழிப்பற்றும் நிறைந்தோன்—பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் இலங்கைக் கிளையின் தலைமையை மட்டுமன்றி—மாநாட்டுத் தலைமையையும் ஏற்றுக்கொண்டிருக்கும்போது—தமிழ் மொழி எப்படித் தாழ்வுறமுடியும்?

திருமதி சரஸ்வதிபாக்கியராசா தமக்கேயுரிய இனிய குரலில் தமிழ் வணக்கப் பாடல் பாடிமுடித்ததை யடுத்து—கணீரென்ற குரலில் பேராசிரியர் அவர்கள் தம்முடைய தலைமையுரையை தமிழில் நிகழ்த்த ஆரம்பித்தபோது என் நெஞ்சத்தில் மேற்கண்ட நினைவுகளே எழுந்தன.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் நான் குறிப்பிடவேண்டும்!

அடுத்தவருக்கு குழந்தை கிடைக்கிறதே — எனக்கு கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தில், பொறாமையில், பொச்சரிப்பில் — அடிவயிற்றின் மீது அம்மிக் குழவியைக் கட்டிக்கொண்டு தான் கர்ப்பம் தரித்திருப்பதாக ஊருக்கு கூறிக்கொண்டிருந்தாளாம் யாரோ ஒருத்தி!

அதே போல மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த விடாது தடுப்பதற்கு பல வேறு சூழ்ச்சிகள் எல்லாம் செய்து — அவையெல்லாம் புஸ்வாணமாகி — மூக்கறுபட்ட நிலையில், மாநாட்டுக்கு விடுக்கப்பட்ட அழைப்பையும் நிராகரித்து, தனக்குத்தானே கரிபூசிக்கொண்ட இலங்கை அரசாங்கத்தின் தலைமைத் தரகர் — மாநாடு யாழ்ப்பாணத்தில் ஜாம் ஜாம் என்று வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் — கொழும்பில் ஐந்தாறு ஆமாம்சாமிகளை சுற்றிவர வைத்துக்கொண்டு ஒரு நூல் வெளியீட்டு விழாவில் பேசினாராம்!

'ஒரு சிலர் தமிழ்த்தாய்க்கு யாழ்ப்பாணத்தில் அந்நிய மொழியிலே ஆராய்ச்சி நடத்துகிறார்கள்' என்று உலகத் தமிழ் மாநாட்டில் நடைபெறுவதென்னவென்பதை யாரிடமாவது விசாரித்துக் கூட அறியாது—



தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டி நாள்தோறும் நடைபெற்ற கலைவிழாவில் கலந்துகொண்டு அவற்றைப் பார்த்து ரசிக்க கலைப்பிரியரான தந்தை செல்வாவும்தவறவில்லை. படத்தில் தந்தையுடன் சாவகச்சேரி பா: உ. வி. என். நவரத்தினத்தையும் காணலாம்;

வாலும் தெரியாது, தலையும் புரியாது குறிப்பிட்ட தலைமைத் தரகர் இந்த விழாவில் அடித்து முழக்கியிருந்தார்;

மாநாட்டில் தமிழர்கள் தமிழிலேயே பேசினார்கள்— தமிழர்கள் சமர்ப்பித்த பெரும்பாலான ஆராய்ச்சிக் கட்டுரைகள் தமிழிலேயே இடம் பெற்றிருந்தன; தமிழே மாநாட்டு முதன் மொழியாக விளங்கியது; தமிழரல்லாதார் தங்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்திலே படித்தார்கள். அவர்கள் கூட, பொது

## கோவை-மகேசன்

மக்கள் மத்தியிலும் வரவேற்பு வைபவங்களிலும் பேசுகையில், தமிழ் மொழியிலேயே அழகாகப் பேசினார்கள்; இந்த உண்மைகளை அறியாது, தலைமைத்தரகர் கொழும்பில் வழக்கம்போல புலம்பித்தீர்த்திருந்தார்!

விரக்தியினால் ஏற்பட்ட அவரது புலம்பலை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு — நாம் இப்போது கலாநிதி வித்தியானந்தன் விரகர்ச்சனை புரியும் வீரசிங்கமண்டபத்துக்கு வருவோம்!

யாழ்ப்பாணம் விறுபடைத்த தமிழர் நிலம்; அதற்கு சொற்றிறனும் உண்டு; விற்றிறனும் உண்டு; ஆதிமுதலே அது அந்நியர் ஆட்டுமியங்களை எதிர்த்து வந்திருக்கிறது' — என்ற கவிகோகி சுத்தானந்த பாரதியின் கருத்தை நம்முடைய கலாநிதி அவர்கள் அழுத்திச் சொன்ன போது நம் சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திடுகிறது. ஆம் — இன்றைக்கும் அந்நியர் ஆட்டுமியங்களை எதிர்ப்பதில் முன்னணியில் நிற்பது யாழ்ப்பாண மண்தானே!

தமிழகத்தையடுத்து தமிழாராய்ச்சி மாநாடு நடத்துவதற்கேற்ற தகுதி ஈழத்தமிழருக்கேயுண்டு என்பதையும் — ஈழநாட்டுத் தமிழ் பெரும் அறிஞர்கள், தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளைப் பற்றியும் குறிப்பிட்ட பேராசிரியர், தமிழர் இன்று வாழ்ந்துவரும் பல தேசங்களை நம் நினைவுக்குகொண்டு வந்தார்.

'ஆனால் இத்தேசங்கள் பலவற்றில் அவர்கள் தமிழராக வாழவில்லை; தமிழிற் பிறர் பேசுவது விளங்கினாலும் தமிழிற்பேசமுடியாது தவிக்கின்றனர். சிலர் பெயரளவிலேயே —இங்குள்ள சிலர் போல—தமிழராக இருக்கின்றனர்.'

என்று அவர் குறிப்பிட்டபோது பலமான கையொலி எழுந்து மண்டபம் முழுவதையும் அதிரவைத்தது;

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் தோற்றம் பற்றியும் அதன் சாதனைகள் பற்றியும் தமது தலைமையுரையில் குறிப்பிட்ட பேராசிரியர், தமது மொழியையும் இனப் பண்பாட்டையும் மறந்துவரும் தமிழர்களுக்கு சாட்டையடிகொடுக்கவும் தவறவில்லை!

'பிறநாட்டாரின் தமிழ்ப் பற்றையும், அபிமானத்தையும் அவர்கள் தமக்கும் தமது பிள்ளைகளுக்கும் தமிழ்ப்பெயர்கள் வைப்பதிலிருந்து மதிப்பிடலாம்! ரஷியாவிலுள்ள அறிஞர்கள், செம்பியன், ஐங்குன்றன் என்றுதமிழ்ப் பெயரைத் தமக்குச் சூட்டிக்கொள்ளும் அளவுக்கு தமிழபிமானம் கொண்டுள்ளனர்; செக்கோசிலவேக்கியாவிலுள்ள தமிழ் ஆராய்ச்சியாளர் ஒருவர் தன்மகளுக்கு அன்னம்மா என்று பெயர் சூட்டியுள்ளார். நாம் எமது பிள்ளைகளுக்குத் தமிழ் பெயர் வையாது இனிமா நட்சத்திரங்களின் பெயர்களைச் சூட்டி தமிழ் இனத்தின் மானத்தை வாங்குவதை எண்ணும் போது தலைகுனிய வேண்டியிருக்கின்றது. பிறநாட்டு தமிழ் அறிஞர்கள்தாம் இறந்தபின்பு தமது கல்லறையில் 'தமிழ் மாணவர்' எனப் பொறிக்க வேண்டுமென விரும்புகின்றனர். தமிழபிமானம் கொண்ட இவர்கள், மறுபிறப்பெடுத்தால் தமிழராகவே பிறக்கவிரும்புகின்றனர்'

—இப்படி உணர்ச்சியுடன் குறிப்பிட்ட கலாநிதி வித்தியானந்தன் அவர்கள்— "இப்படிப்பட்ட பிறநாட்டறிஞர்களைத்தான் இம் மாநாட்டிற்கு வரவிட வேண்டாமென எம்மிடையே சிலர் 'வற்புறுத்தியதை நினைக்கும் போது தலை நிமிர்ந்து நிற்க முடியாமலிருக்கின்றது" என்று கூறி முடித்த போது, தமிழ் பகைவர்களின் செவிகளில் நாராசம் காய்ச்சி ஊற்றியது போன்று இடி முழக்கம் போல ஆரவாரித்து மண்டபத்துள்ளும் வெளியிலும் திரண்டிருந்த தமிழர் கூட்டம் கரவொலி எழுப்பி வரவேற்றது.

இதன் பின்னர், அனைத்துலகத் தமிழாராய்ச்சிமன்றம் வணக்கத்துக்குரிய தனிநாயக அடிகளாரின் குழந்தையெனக் குறிப்பிட்ட பேராசிரியர் "இந்த ஆண்டு சனவரி 7ம் நாள் இக்குழந்தைக்குப் பத்தாவது ஆண்டு நிறைகிறது. பத்தாவது ஆண்டிறுதியில் இக் குழந்தைக்கு ஒரு 'கத்து' ஏற்பட்டது. அத் கத்திலிருந்து குழந்தையைக் காப்பாற்ற தனிநாயக அடிகளும் எம்மோடு சேர்ந்துழைத்தார். குழந்தையைப் பத்திரமாகக் காப்பாற்றி விட்டோம்'— என்று எடுத்துக்கூறியபோது உணர்ச்சிமேலீட்டால் நமது கண்கள் பனித்தன;

'பத்தாவது ஆண்டில் ஏற்பட்ட கத்து, என்ன—தமிழா



பேராசிரியர் சு. வித்தியானந்தன்

ராய்ச்சி மாநாடு எனும் குழந்தையை கொல்லமுயற்ற துரோகிகள் யார் யார்?— என்பதைப் பற்றியெல்லாம் இக்கட்டுரைத் தொடரில் வாசகர்களுக்கு சாங்கோபாங்கமாக எழுத இருக்கிறேன்.

'என்னை நன்றாக இறைவன் படைத்தானன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'— என்ற அடிகளுடன் தம்முடைய தலைமையுரையை கலாநிதி வித்தியானந்தன் முடித்துக்கொள்ளத் தொடர்ந்து—தமிழே வடிவாகிய தனிநாயக அடிகளார் தமது மாநாட்டுத் துவக்க உரையை நிகழ்த்தத் தொடங்குகிறார்!

—வளரும்

# பெரியவர் என்றோர் எளியவர்



எழுபத்தாறுவது பிறந்த நாளை எட்டியுள்ளார் தந்தை செல்வா. முக்கால் நூற்றாண்டாக இந்நாட்டு அரசியலில் கட்டபவெப்ப தடுமாற்றங்களுக்கு மத்தியில் ஊசலாடாது முற்றிக்கனிந்தவர் இந்த முதியவர். இவர், இன்றும் கூட — அரசியல் அர்த்தத்தில் கூறுவதானால் — அழுகிச் சொத்தையாகாமல் நித்தியம் கனிந்திருக்கும் நீர்மை வியப்புக்குரியதல்ல; காரணம், சந்தர்ப்பவாதத்திலே வெம்பிக்கனிந்த அத்திப் பழமல்ல அவர்; அதற்கு மாறாக, கொள்கையில் கனிந்திட்ட கொய்யாக்கனி; குறுக்கு வழியில் கொய்யவோ அவர் செல்வாக்குக்கு ஊறு செய்யவோ எவராலும் முடியவில்லை. எனவேதான், ஈழத்து அரசியல் வானிலே அனைத்து அரசியல்வாதிகளும் அமரபக்கத்து அம்புலியாக, அவர் மட்டும் சுக்கில பட்சத்துச் சோதியம் புலியாகப் பரிணமித்துக்கொண்டும் இருக்கிறார்.

## தொண்டினால் பொலிந்தவர்:

ஓரடியாய் ஈரடியாய் தவர் நடைபோடும் இத்தள்ளாத கிழவன் அரசியல் பாதையில் பதித்த சிரடி ஒவ்வொன்றும் மாற்றாரின் கோட்டையிலே சென்று பேரடியாய் இடித்திருக்கிறது. அவர் முயன்று, உதடுகள் கூட்டி, ஓசைப்படாமல் சிக்கனமாகச் சிந்தும் வார்த்தைகள் இந்நாட்டின் இலட்சோபலட்சம் தமிழ் மக்களின் இலட்சிய நாதமாக எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

இடும்பைகூர் நெஞ்சத்தினராய் இந்நாட்டின் தமிழ்க் குலத்தினர் எழுப்பிய குரல் 'கேளாச் செவியர்' என மாற்றாரின் கிண்டலுக்குள்ளான அவர் செவியில் விழுந்திருக்கிறது. இந்நாட்டின் பஞ்சைத் தமிழர்களின் உள்ளத்தில் சுதந்திரக்கனலைப் பற்றியெரிய வைக்கும் மின்சக்தி அன்னாரின் துடிப்பிழந்த சுட்டுவிரலின் அசைவுக்கு உண்டு. நோய் நொந்தால் நலிந்தவராயினும் தொண்டினால் பொலிந்தவர் அவர். தமிழினத்தின் இலட்சியத்தின் தானையில் அவர் தலைமைத் தளகர்த்தர். தமிழ்த் தாயின் இரட்சணிய சேனையில் அவர் ஒரு தலைமைத் தொண்டர். சுதந்திர தேவியின் திவ்விய சேத்திரத்தில் தீர்த்தமாடுதற்கென விரைந்தோடிக்கொண்டிருக்கும் திராவிடர் திருக்கூட்டத்தில் அவர் ஒரு முன்னணி யாத்திரிகர்; தன் இனத்திற்கு விடுதலை முத்தி கேட்டு விரதங்காக்கும் பத்திமான்.

## சாமானியர்:

தந்தை செல்வா ஒன்றும் அவதார புருஷரல்லர். அசுவமேத யாகத்திலே யாககுண்டத்திலிருந்து பிறந்த அற்புத மனிதருமல்லர். அவர் சாதாரண வல்லமைகளைக் கொண்ட சாமானிய மனிதர் தான். இச்சாமானிய மனிதர், 'தானுண்டு தன் பாடுண்டு' என்ற சாதாரண மனிதரின் சாமானிய கோட்பாட்டைப் புறக்கணித்துவிட்டு, அரசியல் அனாதைகளாக்கப்பட்ட தமிழ் மக்களின் கண்ணீரைத் துடைக்கப் புறப்பட்டார்; தன்னலமறுப்பும் தமிழ்ப் பணியிலே தளராத அவரின் உழைப்பும் அவரைப் பத்திலோ நூற்றிலோ ஒருவராகவல்ல, ஆயிரத்தில் இலட்சத்தில் ஒருவராக ஆக்கிற்று. செல்வநாயகத்தின் செல்வாக்கு செல்வத்தாலே சேர்க்கப்பட்டதல்ல; தரித்திரத் தமிழர்களுக்காக அவர் ஆற்றிய சேவையினாலே சேர்ந்தது;

## சமதர்ம உணர்வுகள்:

சமதர்மச் சித்தாந்தங்களில் தீவிர விருப்புடைய என்போன்ற பலர் தந்தை செல்வாவின் அணியில் சேர்ந்தது, அவர் ஒரு தலையாய சோசலிவாதி என்ற மனப் பிரமையினால் அல்ல. தமிழ் மக்களின் சமூக, பொருளாதார அமைப்பைச் செப்பனிடும் முன்னர் அவர்களது அரசியலமைப்பு திட்டவட்டமாக நிர்ணயிக்கப்படல் வேண்டும் என்பதால், சோசலிசச் சித்தாந்தத்திற்குச் சுருதி சேர்ப்பதற்கு முன்பே பெரும்பான்மை ஏகாதிபத்தியம் தமிழினத்தை ஏப்பம் விட்டுவிடும் என்பதால். சுரண்டுவோன் - சுரண்டப்படுவோன், ஆண்டான் — அடிமை போன்ற வர்க்க உணர்வுகள் இந்நாட்டில் இன்று முதலாளித் தமிழனுக்கும் தொழிலாளித் தமிழனுக்குமிடையில் முரண்பட்டு நிற்கவில்லை; அதற்கு மாறாக பெரும்பான்மையினத்தவர்க்கும் தமிழர்க்குமிடையிலேயே அந்த வர்க்கப்போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதால்.

தந்தை செல்வா தம்மைச் சோசலிவாதியாகப் பறைசாற்றிக்கொள்ளவில்லையாயினும், இந்த நாட்டில் பென்னம்பெருத்த சோசலிசப் பெம்மான்கள் எவரிடமும் காணமுடியாத சமதர்ம உணர்வுகளை, சமத்துவ உளப்பாங்கை அன்றாடம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் நேர்த்தி இந்தப் பெரியவரிடம் உண்டு.

அன்னாரின் சமூக, அரசியல், தொழிற்றுறை அந்தஸ்துகளினால் எட்டடுக்கு மாளிகையில் எட்டாவது மாடியிலிருக்கும் இவர், நடமாடுவது வெறும் கட்டாந்தரையில்தான்; உறவாடுவதும் சாமானியர்களுடன் தான். ஈழத் தமிழினத்தைக் கட்டியாளும் தலைவன் — ஆட்பலமும் அதிகார பலமும் படைபலமும் மிக்க எத்தனையோ அரசாங்கங்களைத் தூக்கியெறிந்த துரைமகன் — தொழில் சடுபாட்டை நேற்று விடும்வரையில் இலங்கையின் தலைசிறந்த வழக்குரைஞராகத் துலங்கிய 'இராணி அப்புகாத்து' — நாடாளுமன்றத்தில் இரண்டாவது எதிர்க்கட்சியின் தலைவன் — ஆட்சிக்கெதிராக எத்தனையோ போராட்டங்களை நடாத்தி வெற்றிகண்ட செம்மல் — பிறக்கும் போதே குலப்பெருமை குடும்பப் பெருமை ஐசுவரியம் எல்லாவற்றுடனும் பிறந்த கோமான் — இன்று கொழும்பிலும் சரி யாழ்ப்பாணத்திலும் சரி இ: போ. ச. பஸ் வண்டிக்காக நாலுபேருடன் காத்திருக்கும் காட்சியை இந்த நாடறியும். பொதுவாழ்வில் பொலிவுடனும் வலிவுடனும் புகுந்த ஒரு சீமான், இன்று வலிவும் பொலிவும் வளமும் ஒடுங்கி உலர்ந்து போயிருக்கிறார் என்றால், அவனுடைய தன்னலமற்ற சேவைக்கு இதைவிட வேறு சான்றிதழ் என்ன வேண்டிக்கிடக்கிறது? 'இராணி அப்புக்காத்து' ஒருவன் பஸ்வண்டியில் பயணம் செய்ததாக இந்நாட்டில் வரலாறே கிடையாதே. அந்த வரலாற்றைப் படைத்தவரே பெரியவர்தானே.

## பெரியவரின் பெருவாழ்வு:

தந்தை செல்வாவின் எளிமையான வாழ்வின் செம்மையை இன்னோர் உண்மையுடன் ஒப்புநோக்குதல் நலம்: அதாவது, தமிழ் மாநிலத்தில் பொதுவுடமை சித்தாந்த வித்தகர்கள் என்றும், சோசலிசச் செம்மல்கள் என்றும், இளைய தலைமுறையின் புதிய தலைவர்கள் என்றும், வர்க்கப்போரின் தளபதிகள் என்றும் விளம்பரம் பெறும் சிலர் — என் நினைவுக்கெட்டிய காலம் வரையில் ஒரு போராட்டத்தை நடாத்தி பொலிசாரை எதிர்நோக்கியறியாத புரட்சிவாதிகள் — வைக்கோற்போருடனும் வாய் வெடிகளுடனும் வர்க்கப்போரை நடாத்திக் கொண்டிருக்கும் அக்கப்போர் வீரர்கள் — மேல் விலாசமோ மேதாவிலாசமோ இன்றி சந்தர்ப்பவசத்தாலே சந்தடி

**கரிகாலன்**

யின்றிச் சபையேறியவர்கள் எங்கிருந்தோ வந்தவர்கள் — இடைக்காலத்தில் ஏற்றம் பெற்ற ஏஜன்டுகள் — இவர்களெல்லாம் மினுக்கிய மேனியுடனும் நிமிர்த்திய நெஞ்சுடனும் மோட்டார் வண்டிகளில் பவனிவரும் காட்சி, எங்கள் பெரியவரின் பெருவாழ்வின்மாட்சிகூறும்; சிறியவர்களின் 'சில்லறை வாழ்வுக்கு' சாட்சி கூறும்.

## சமூகப் புரட்சி:

சோசலிசவாதி எனத் தம்மை அலங்கரித்துக்கொள்ளாத தந்தையவர்கள் சொந்த வாழ்வைச் சோசலிசப் பண்பாடுகளுக்கேற்ப வாழ்பவர்; தமிழரசுக் கட்சியின் அமைப்பு விதிகளில் கட்சியின் குறிக்கோள்களில் ஒன்றாக "சாதிமத பேதமற்ற சோசலிச சமுதாயத்தை நிறுவுதல்" என்ற திட்டத்தை முன்மொழிந்தவர். தமிழ் மக்கள் மத்தியிலிருந்து தீண்டாமையைக் களைவதற்கு தனியொரு இயக்கமாக முன்னின்றுழைத்தது தமிழரசுக் கட்சியென்றால், அக்கட்சியை சமூகப் புரட்சியில் வழிநடாத்தியவர் செல்வா அவர்களே. அதிலும் குறிப்பாக, தேர்தற்களத்திலே அரசியல் அறுவடை செய்யும் நோக்குடன் 'முற்போக்கு சக்திகளெல்லாம்' சந்தனப்பொட்டும் நெற்றியுமாக மாவிட்டபுரத்து மானியச்சக்திகளுடன் கும்மிருட்டில் 'குசுகுசு' மாநாடு நடாத்திப் பேரம்பேசிய வேளைகளில், கட்சியின் சமத்துவக் கொள்கையின்மீது தேர்தலுக்குநின்ற திண்ணியவர் தந்தை செல்வா;

அரசியற்களத்தில் இவரை நேருக்குநேர் சந்தித்துத் தோளுக்குத்தோள் பொருது தோற்கடிக்கமுடியாதவர்கள் — அம்முயற்சியிலே தோற்றுப்போனவர்கள் — மதமாச்சரியங்களைக் கிளப்பிப் பெரியவரின் தலைமையைத் தகர்க்க முனைந்தனர்; சிறித்தவர் — இந்துக்கள் என்ற கீழ்த்தர வாதங்களை அந்தரங்கத்தில் கூறி அங்கலாய்த்தனர்; ஏற்கனவே சிறுபான்மையினர் என்ற பலவீனத்தால் வாழ்விழந்த தமிழரை மேலும் சின்னாபின்னமாக்க முயன்றனர்; சுதந்திர சொர்க்கத்தைக் காணவேண்டிக் கடுந்தவமியற்றும் தமிழர்களின் புலன்கள் இந்த மிலேச்சவாதங்களினால் ஈர்க்கப்படவில்லை. சொரணையுள்ள தமிழ் மக்களின் ஆண்மைவலிக்கு அழுத்தமான சான்றாகும்.

## ஈழத்தின் காந்தி:

"ஈழத்தின் காந்தி" என்ற அடைமொழியைப் பெரியவருக்குச் சூட்டியதையிட்டு முகத்தைச் சுழித்துக்கொண்டனர் சிலர்; நெற்றியைச் சுருக்கிப் புருவத்தை நெரித்துக் கொண்டனர் இன்னுஞ் சிலர்; 'செல்வநாயகமும் மகாத்மா காந்தியும் ஒரே தரத்தினரா?' என முணுமுணுத்துக்கொண்டனர்; உண்மையைக்கூறுவதாயின், இச்சிறு கூட்டத்தினர் தந்தையை நிந்தித்தே பழகிவிட்டவர்கள் மட்டுமல்ல; காந்தீயத்தைப் பற்றிக்கூடக் கவலைப்படாதவர்கள். இன்னும் யதார்த்தமாகக் கூறுவதாயின், சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில் இந்தியாவிலிருந்திருந்தால் அண்ணல் காந்தியையே பழித்திருக்கக்கூடியவர்கள்; தூற்றுவதற்கென்றே பிறந்தவர்கள் இவர்கள்;

ஈழநாட்டில் காந்தியத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரே தலைவன் தந்தை செல்வா என்பதால் 'ஈழத்தின் காந்தி' செல்வநாயகம் என்கிறோம்; இதனால் செல்வநாயகம் காந்தியடிகளின் பரிமாணங்களைக் கொண்டவரென்று பொருளல்ல, அடிகளின் பக்குவத்தைக் கொண்டவரென்று பொருள். இதே பொருளில் தான் 'தென்னாட்டுக் காந்தி அண்ணா' எனத் தென்னகத்துத் திராவிடர்கள் அமரர் அண்ணாவை அழைத்துக் கொண்டனர்; அமெரிக்க நாட்டு நீக்ரோவர்களும் அமரர் மாட்டின் லூதர் கிங்கைத் தமது காந்தியென அழைத்துக் கொண்டனர். இந்த ஒப்புவமையில் காந்தியடிகள் உவமானப் பொருளாகவும் தந்தை செல்வா உவமேயப் பொருளாகவும் விளங்குகின்றனர்; உவமானப்பொருள் எப்போதுமே ஒருபடி உயர்ந்ததே; 'ஈழத்துக் காந்தி செல்வா' என்கிறோமே தவிர 'இந்தியச் செல்வா காந்தியடிகள்' எனக் கூறத்தலைப்படவில்லையே.

காந்தியடிகளும் தந்தை செல்வாவும் ஒரேபடியினரல்லராயினும், ஒரேபான்மையினர், ஒரே அணியினர்; இருவரும் ஒரே தரத்தினரல்லராயினும் ஒரே வகையினர், ஒரே வகுப்பினர் என்பதே தேற்றம்.

## தனியொரு தத்துவம்:

1951ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழரசுக் கட்சி திருகோணமலையிலே நடாத்திய கட்சியின் முதலாவது மாநாட்டிலே தலைமையுரையாற்றிய தந்தை செல்வா அவர்கள் கூறிய முடிவுரை மிகவும் தாக்கமானது; தனியொரு தத்துவமானது.

"............ இவ்வியக்கத்தில் பணிசெய்யும் ஊழியர்களாகிய நாம், நம் தலைமுறையிலேயே எமது கோரிக்கைகைகூடுமென்று விசுவாசிக்கிறோம். எம் தலைமுறையிற் கைகூடாவிடினும் நாம் இப்போரை நடாத்தி எமக்குப் பின்வரும் தலைமுறையின் கையில் கொடுப்பது எமது கடன். எமக்குப் பின்னே அரும்பெரும் வீரர்களை எம்மினம் பெறக்கூடும். குறைந்த பட்சத்தில் அவர்களை அணி வகுப்பவர்களாகவாகிலும் இருப்போமாக............" என்றார்.

இவ்வார்த்தைகளுக்கு உயிரும் தசையும் உதிரமும் கொடுக்கும் பணியில் கடந்த 23 ஆண்டுகளாகத் தந்தை செல்வாவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட விடுதலைக் கிளர்ச்சிகளையும் தீட்டப்பட்ட வீரகாவியங்களையும் இந்நாட்டின் வரலாற்றுச் சுவடுகள் கூறும். இத்தொடர் காவியத்தில் இன்னோர் அத்தியாயத்தை எழுத முனைந்த தந்தையர்கள், தமது தேசிய அரசப்பேரவை உறுப்பினர் பதவியையும்

(7-ம் பக்கம் பார்க்க)

## தந்தையே! வாழ்க

—பூநகர் மரியதாஸ்—

எங்கள் தந்தைக்கு...
இன்று எழுபத்தாறு—
தங்கத் தலைவன் செல்வாவுக்கு—இன்னும்
இருபத்தி நான்கு...
தமிழ் தாயின் பெருமகன்
இவன் சொற் கேட்டே,
கோடி மாந்தர் அணி திரளுவர்.
தமிழன்னைக்கு மணி முடிகேட்டு
துன்பங்கள் பல் கோடி துய்த்தவன்
அஞ்சா நெஞ்சன்...
மிஞ்சும் சாதுரியன்... நீ
முப்பத்தைந்து லட்சம் சிங்கங்களுக்கு
அதிபதியே...
தந்தையே...!— நீ நடந்த பாதை வழி
என் சுவடுகள் தொடரும்
உன் எழுபத்தாறில்—ஒருவன் ஜனனம்
அவனே—உன் நூறில்,
உன்பெரும் பாதை வழியின்,
பெருந் தொண்டன்.
உன் பாதையில் நாம் சென்று
வீரமுரசொலிக்க,—
என்று தருவாய் வரம்
எல்லையில்லா பேரமைதியின்
அரசனே...!
சத்தியனே...!
வித்தகனே...!
பெரியவர் தந்தை செல்வாவே!
நீவிர்—
நூறாண்டு காலம் வாழ்க...

## எண்ணம்

# காரணம் என்ன?

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளின்போது நடைபெற்ற பயங்கரகொடுமை பற்றி — நெஞ்சுருக்கும் சம்பவங்கள் பற்றி — பொலிசார் அப்பாவிகளான தமிழர்கள் மீது நடத்திய காட்டுமிராண்டித்தனமான மிலேச்சத் தாக்குதல் பற்றி — நீதி விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறிய அரசாங்கம் பாரபட்சமற்ற ஓர் உயர்மட்ட ஆணைக்குழுவை நியமிக்கவேண்டியதன் அவசியத்தை தமிழ் சமுதாயத்திலுள்ள பல துறைப்பட்டவர்களும் — பல்வேறுபட்ட அரசியல் கருத்துக்களைக் கொண்டவர்களும் கடந்த இரு திங்களாக ஒரே குரலில் வலியுறுத்தி வந்திருக்கின்றனர்.

அரசியல் கட்சிகள், உள்ளூராட்சி மன்றங்கள், பொது நலமன்றங்கள், சமய நிறுவனங்கள், முஸ்லிம் லீக் போன்ற இயக்கங்கள் — இவ்வாறு பல்வேறுபட்ட அமைப்புக்களும் இக்கோரிக்கையை இறுக்கமாக முன்வைத்து வந்துள்ளன.

தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிர்துறந்தவர்களின் மரணங்கள் பற்றி விசாரணை நடத்திய யாழ் நீதவான், தமது தீர்ப்பின் இறுதியில் எழுப்பியிருக்கும் சில கேள்விகளும் பொதுவிசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்படவேண்டியதன் அவசியத்தையே வற்புறுத்தி நிற்கின்றன.

யாழ்ப்பாண பொதுமக்களால் நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் கிறெட்சர் தலைமையிலான விசாரணைக்குழுவின் அறிக்கையும் பாரபட்ச மற்ற பொது விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டியதன் அவசியத்தையே மிகவும் அவசரமாக வற்புறுத்தியுள்ளது.

அரசாங்கத்தில் ஒட்டியிருக்கும் தபாலமைச்சர் செல்லையா குமாரசூரியர், பொதுவிசாரணைக் கமிஷன் நியமிக்கப்படும் என்று எவ்வித ஐயத்துக்குமிடமின்றி திட்டவட்டமாகக் கூறிவந்தார்.

ஆளுங்கட்சியின் அடி நக்கி வயிறுகழுவும் தரகர்கள் அனைவரும் அரசு, கமிஷன் நியமிக்கும் என்று கூறி வந்தனர்!

ஆனால் — தமது சகாவான திரு. செல்லையா குமாரசூரியரின் வாக்குறுதியை, துணைபாதுகாப்பு அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி அப்படியே தூக்கியெறிந்து விட்டார்! தமிழ் மக்கள் கட்சி வேறுபாடின்றி விடுத்த கோரிக்கையை — தமிழ் சமுதாயத்தின் ஒன்றுபட்ட குரலை அரசாங்கம் நிராகரித்துவிட்டது! அலட்சியம் செய்துவிட்டது!!

ஆம். தமிழாராய்ச்சி மாநாட்டு சம்பவங்கள் பற்றி விசாரணைக்குழு நியமிக்கவேண்டிய தேவை எதுவும் இல்லையென்றும் எனவே அரசு அப்படியொரு உயர்மட்ட விசாரணைக்குழுவை நியமிக்கப் போவதில்லையென்றும் துணைப்பாதுகாப்பு அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி திட்டவட்டமாக அறிவித்து விட்டார்!

சிங்களவரான ஒரு தொடம்பே முதலாளி இறந்தது பற்றி—அதுவும் அவர் தற்கொலை செய்துகொண்டதாகவே மரண விசாரணையில் தீர்க்கப்பட்டிருந்தும்—உயர்மட்ட ஆணைக்குழுவை நியமித்து விசாரணை நடத்தும் அரசாங்கம், ஒரு சர்வதேசிய மாநாட்டில் அதுவும் வெளிநாட்டுப் பேரறிவாளர்களின் முன்னால் நடைபெற்ற படுபாதக பயங்கரக்கொடுமை பற்றி உயர்மட்ட விசாரணை நடத்தி நீதியை நிலை நாட்ட முன்வராது சாக்குப்போக்குச்சொல்லி தட்டிக் கழிக்கிறதென்றால் அதன் அந்தரங்கக் காரணம் என்ன?

மாநாட்டில் துடித்துப் பதைத்து இறந்தவர்கள் தமிழர்கள்தானே என்ற அலட்சிய மனப் பான்மையா?

அடியும் உதையும் பட்டு, கண்ணீர்ப்புகைக்குண்டுகளால் அவதிப்பட்டு, மிதிபட்டு, துவைபட்டு, புழுக்கள் போல், பொட்டுப் பூச்சிகள் போல் நசுக்கப்பட்டு கொடுமைப் படுத்தப் பட்டவர்கள் தமிழர்கள்தானே என்கின்ற வேண்டா வெறுப்பா?

பொலிசாரின் தாக்குதலால், அல்லோல கல்லோலப் பட்டு அல்மந்து ஓடி, கண்ணீர்ப்புகைக் குண்டுக்கு ஆளாகி, சேலைகளை இழந்து நிர்வாணமாகி மானபங்கப்பட்டவர்கள் —நகைநட்டுக்களை பறிகொடுத்தவர்கள்—தமிழ்ப்பெண்கள் தானே என்கிற உதாசீன கண்ணோட்டமா?

ஆம், உயர் மட்ட நீதிவிசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிக்க முடியாது என்ற அரசாங்கத்தின் அறிவிப்பு—தமிழ் பேசும் மக்கள் இந்நாட்டில் அடிமைகளாக—இரண்டாந்தர மூன்றாந்தர நிலையில்—ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள் — வேண்டாப் பிரஜைகளாக ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையே பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டி விட்டது!

தமிழ் தேசிய இனம், இந்த அரசாங்கத்திடம் நீதியை ஒரு போதுமே எதிர்பார்க்க முடியாது என்பதையும், அது தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்ள சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டதென்பதையும் அரசின் போக்கு உணர்த்துகிறது!

---

தாங்கொணு அதர்மம் மிஞ்சித் தருமர்கள் வருந்தும்போது
ஆங்கறம் காக்கத் தோன்றும் அவதார புருஷன் போல
சங்குநம் தமிழினத்தை இழிக்கச் சிங் களவர் செய்யும்
தீங்குக ளின்றும் காக்கும் செல்வா! நம் தந்தாய்!!
போற்றி!!!

—வழக்கறிஞர் வ. இராசநாயகம்.




இராமலிங்கம்,
கொழும்பு-6;

கே: நிலத்தைப்பாதுகாப்பதால் மட்டுமே தங்கள் மொழியையும், கலை கலாசாரத்தையும் காப்பாற்ற முடியும் என்பதை காஷ்மீரிகள் உணர்ந்திருப்பதாக தினபதியார் எழுதியிருந்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: காஷ்மீரிகள் அதை உணர்ந்து என்ன பிரயோசனம்? 'தினபதியார்' போன்றவர்கள் அதை உணராது— ஈழத்தமிழ் நிலத்தைக் கபளீகரம் செய்யும் சிங்கள வெறிச் சக்திகளுக்கு சிந்து பாடி வயிறு கழுவுகிறார்களே! தமிழ்நிலத்தைக் காப்பாற்ற போராடும் தமிழ் விடுதலை இயக்கத்தவரை 'குறுகிய' நோக்கம்கொண்டவர்கள்— வகுப்புவாதிகள் —என்றெல்லாம் திட்டி எழுதி தம் வயிற்றை நிரப்புகிறார்களே!

ஃ

முருகையா,
யாழ்ப்பாணம்.

கே: மக்களுக்கு இவ்வளவு தூரம் இன்னல் விளைத்தும் இந்த அரசாங்கத்தைவிட்டு ஒருவராவது வெளியேறுவதாக இல்லையே!

ப: வெளியேறினால் இன்று அனுபவிக்கும் சுகம் பறிபோய் விடுமே- இப்போது உடுகம வெளியேறி 'உடுக்கு' அடிக்கத் தொடங்கியிருக்கிறார்! அந்த உடுக்கடியின் வேகத்தால் இன்னும் சிலர் சன்னதம் பிடித்து வெளியேறக்கூடும். பொறுத்திருந்து பார்ப்போம்!

ஃ

செல்வி மு. வள்ளிநாயகி,
கொழும்பு-7.

கே: அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட இராமநாதன் இசைக்கல்லூரியின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

ப: தமிழ் இசையும், கலையும் அங்கு இனிக் கலப்படம் செய்யப்படலாம்! இசை மூலம் இன ஒற்றுமையை ஏற்படுத்தும் முதற்படியாகவே இசை நடனக்கல்லூரி திறக்கப்படுகிறது என்று கூறிவிட்டாரே கல்வியமைச்சர். 'இன ஒற்றுமை' என்ற போர்வையின்கீழ் தமிழ் இசை, தமிழ்க்கலை ஆகியவற்றின் தனித்துவம் எதிர்காலத்தில் அங்கு சிரழிக்கப்படக்கூடும்!

கே: இராமநாதன் இசை நடனக் கல்லூரி தமிழ் மாணவமாணவிகளுக்காகவே இனிமேலும் இயங்குமா?

ப: இதுவரை காலமும் தமிழ் மாணவிகளுக்காகவே பிரத்தியேகமாக இயங்கி வந்தது அக்கல்லூரி! அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட பின்னர், இனி எல்லா இன மாணவர்களுக்கும் அக்கல்லூரியில் இடமளிக்கப்படும் என்று கூறியிருக்கிறாரே குமாரசூரியர்.

ஃ

இராசகிளி,
மட்டக்களப்பு.

கே: 'பிரஹ்மி' எழுத்துக்களே தமிழ் எழுத்துக்களின் மூலம் என்ற கருத்தை நீங்கள் ஏற்கிறீர்களா?

ப: ஒருபோதும் ஏற்கமாட்டேன். இந்தப் பிரசாரம் தமிழின் தனித்தியங்கும் ஆற்றலையும் அதன் தொன்மையையும் மூடிமறைக்கும் திட்டமிட்ட முயற்சி. இந்தப் பிரசாரத்தை இப்போது ஈழத்தில் 'சிங்கள' பாலா ஒருவர் நடத்திவருகிறார். தமிழகத்து பேராசிரியர் இலக்குவனார் போன்ற அறிஞர்கள் இங்கு இல்லாமற் போனதனால் இவர்களின் பொய்ப்பிரசாரத்துக்கு ஈழம் இன்று களமாகிவிட்டது!

கே: இலங்கை வானொலியின் தமிழ் நிகழ்ச்சிகளை நீங்கள் கேட்பதுண்டா?

ப: அது வானொலியாக இருந்தாலல்லவோ கேட்பதற்கு? அதுதான் ''போலிக் கம்யூனிஸ்ட் மாஸ்டேஸ் வாய்ஸ்'' ஆகி நாள்தோறும் வீணொலி செய்கின்றதே!

ஃ

செல்வநாதன்
பதுளை

கே: இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சியில் எனது படைப்புக்களை ஒலிபரப்புவதற்கு விரும்புகிறேன்; என்ன செய்யவேண்டும்?

ப: கலாநிதி சிவத்தம்பி, கலாநிதி கைலாசபதி, இந்திரபாலா — இப்படியாருக்காவது முதுகு சொறிய வேண்டும்! அல்லது இவர்களுக்கு எல்லாம் வானொலி 'அட்வைசராக' விளங்கும் மே(ல்)தாவி வினைதனுக்கு காக்காய் பிடிக்கவேண்டும் முடியுமா உங்களால்?

ஃ

செல்வி. ரஜனி,
கந்தரோடை

கே: அ. தி. மு. க. வின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

ப: மக்கள் திலகம் எம். ஜி. ஆரின் தனிச்செல்வாக்கை மட்டுமே நம்பியா அல்லது பலமான கொள்கையின் அடிப்படையிலா அது இயங்க இருக்கிறது என்பதைப் பொறுத்த விடயம் அது!

கே: நீங்கள் வணங்கும் தெய்வம் எது?

ப: உணர்ச்சி கெட்ட தமிழ்ச் சாதிக்காக தங்கள் உற்றார் உறவினரைப்பிரிந்து உல்லாச வாழ்வை நீத்து உத்தியோகத்தையும் உதறித் தள்ளி என்று விடுதலை கிடைக்கும் என்பதும் தெரியாது சிறைகளில் ஆண்டுக்கணக்காகவும், மாதக்கணக்காகவும் அடைபட்டுக் கிடந்து புதிய தியாக வரலாற்றைத் தீட்டிவரும் தமிழ்த்தாயின் இளம் சிட்டுக்களே நான் வணங்கும் தெய்வங்கள்!

---

குயுக்தியாரிடமிருந்து பதில்பெற விரும்புவோர் கேள்விகள் எழுதப்பட்ட அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்புக:-

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> 194 ஏ. பண்டாரநாயகா வீதி,
> கொழும்பு-12.

## ஐயோ தமிழினமே!

''வேம்படி மகளிர் கல்லூரி முன்றலில் கல்வி அமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. மாணவிகள் நடனமாடி பாரம்பரிய தமிழ்கலாசார சம்பிரதாயத்தின்படி அமைச்சருக்கு சந்தனத் திலகமிட்டு, பன்னீர் தெளித்து பூவால் அர்ச்சித்து தசம்பூலம் வழங்கி கலை நுட்பம் நிறைந்த கப்பனம் ஒன்றை வழங்கிக்கௌரவித்தனர்.''

—ஈழநாடு (25-3-74)

## 'தமிழ் மாநாடு'

ஈழத்து ஆளவந்தாரின் கடும் எதிர்ப்புக்கும் ஈழத்து நாளேடுகளின் ஒத்துழையாமைக்கும் நடுவே ஈழத் தமிழர்களின் பேராதரவுடன் யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்த நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு குறித்து, மேற்படி மாநாட்டில் கலந்துகொண்டவரும், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவருமாகிய டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் மாநாட்டுச் சூடு ஆறுமுன்னரே 'தமிழ் மாநாடு' என்னும் பெயரில் குறு நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

மாநாட்டைப்பற்றி அறியாத—மாநாட்டில் கலந்துகொள்ளாத தமிழகத்தாரும் ஏனையோரும், ஈழத் தமிழர்களின் மொழி இலக்கிய கலை கலாசார ஆர்வத்தையும் அறிவதற்கும், மாநாட்டு இறுதி நாளன்று தமிழ் கேட்கவந்து தங்கள் இன்னுயிர் தந்த தமிழ்க் கண்மணிகளுக்கு காணிக்கையாகவும், டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் இந்நூலை இக்குறுகிய காலத்துள் வெளியிட்டுள்ளது பாராட்டப்படவேண்டியதே.

ஈழத் தமிழகத்தில் நடைபெற்ற மாநாட்டில் நேரடியாக கலந்துகொண்டு பார்த்து அனுபவித்து, உணர்ந்து தம் நெஞ்சத்திலே சுமந்து சென்ற அனுபவங்களையும் கருத்துக்களையும் தமக்கேயுரிய அழகு தமிழில் இந்நூலில் சுவைபடக் கூறுகிறார் டாக்டர் சாலை.

ஈழத்து தமிழ் இதழ்களுள் சுதந்திரன் வார இதழ் மட்டுமே தொடக்கம் முதற்கொண்டு மாநாட்டுக்கு முழு ஆதரவு தந்து வந்தது என்ற உண்மையையும் டாக்டர் சாலை தமது நூலில் சுட்டிக்காட்டத்தவறவில்லை; நூலின் அனுபந்தமாக மாநாட்டில் டாக்டர் சாலை அவர்களும், டாக்டர் சாலினி அவர்களும் படித்த கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

விலை ரூபா 2/00 கிடைக்குமிடம்:— தமிழ்ப் புத்தகாலயம் 576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை—5

# பொதுவாழ்வில் ஈடுபடுவதற்காகக் கோடீஸ்வரராகும் வாய்ப்புக்களையே உதறித் தள்ளியவர் செல்வநாயகம்!

தமிழ் ஈழத்தின் தந்தையும் தமிழர் கூட்டணித் தலைவருமான பெரியவர் செல்வா அவர்களைப் பற்றி 'சிலோன் டெயிலி நியூஸ்' பத்திரிகையில், அப்பத்திரிகையின், சிறப்பு நிருபரான ரேஷன் பீரிஸ் நல்லதோர் கட்டுரையை எழுதியிருந்தார். தந்தை செல்வாவின் 75 வது ஆண்டு நிறைவின் போது 'டெயிலி நியூசில்' வெளிவந்த அக்கட்டுரையின் தமிழாக்கத்தை அவரது 76வது பிறந்த நாளின் போது சுதந்திரன் வாசகர்களுக்காக இங்கே தருகிறோம்.

—ஆசிரியர்.

அருள் நிறைந்த பார்வையும், ஆழ்ந்த சிந்தனையும் ஒருவித புனிதத் தன்மை கொண்ட புகழும் உடைய ஒரு தலைவர் அவர். மெலிந்த மிருதுவான தேகம் ஐந்தடிக்குச் சற்று மேலான உயரம். அரசியல்வாதிகளுக்கிருக்கும் தற்புகழ்ச்சி சற்றும் இல்லாதவர்; அடக்கமானவர்; அவர் வேறு யாருமல்ல. கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகவும் சுமார் ஒருவருடத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் கூட்டணியின் தலைவராகவுமுள்ள சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் தான்.

இன்று அவர் தனது எழுபத்தி ஐந்தாவது வயதை முடித்துக் கொண்டு எழுபத்தி ஆறுவது வயதில் காலடி எடுத்து வைக்கின்றார் தேக அசௌகரியங்கள் பல இருந்த போதிலும் ''எனது கடைசி மூச்சுவரை அரசியலில் இருக்கவே நான் ஆசைப்படுகின்றேன்'' என்று அமைதியான துணிவோடும் திடமான மனத்தோடும் கூறினார்.

## சோதிடம் பலித்தது!

திரு. செல்வநாயகம் அவர்களுக்கு இருபத்தி ஆறு வயது நடந்து கொண்டிருந்த பொழுது அவர் ஒரு நாள் தன்னுடைய நண்பர் ஒருவருடைய சாதகக் குறிப்பை ஒரு பிரபல சோதிடரிடம் எடுத்துச் சென்றிருந்தார்; முகத்தில் அறிவொளி வீசும் அவ்வாலிபனைக் கண்ட அந்தச் சோதிடர் அவ்வாலிபனுடைய சாதகக் குறிப்பையும் காட்டும்படி கேட்டார்; திரு. செல்வநாயகம் அவர்கள் வேண்டா வெறுப்போடு தன் சாதகக் குறிப்பையும் கொடுத்தார். அதைப் பிரித்துப் பார்த்த சோதிடர் வழக்கறிஞரான அந்த வாலிபரிடம் அவர் பிற்காலத்தில் தன் மக்கள் மத்தியிலும் நாட்டிலும் ஒரு தலைவராக விளங்குவார் என்று கூறினார். அதைக் கேட்டு அந்த வாலிபர் அதிசயித்து நின்றார். அப்படி அதிசயித்து நின்ற வாலிபரிடம் சோதிடர் மேலும் ''உங்களுடைய பெயர் கடல் கடந்து சென்று வெளி நாடுகளிலும் வழங்கும்'' என்றும் சொன்னார்;

இன்று—அச்சோதிடர் அப்படிச் சொல்லிச் சுமார் ஐம்பது வருடங்களுக்குப் பின்பு அவர் சொன்னது பலிதமாகி உள்ளது.

## ஒன்றிணைத்தவர்

இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், திரு. தொண்டமான் அவர்களின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய மூன்றும் திரு. செல்வநாயகம் அவர்களின் தலைமையை ஏற்றுக்கொண்டிருக்கின்றன தமிழ் மக்கள் மத்தியிலுள்ள இம் மூன்று பிரிவுகளையும் முதன் முதலாக திரு. செல்வநாயகம் அவர்கள் ஒன்றிணைத்திருந்த படியினால் அவருக்கு இந்நாட்டில் ஒரு தனியான இடமுண்டு என்று திரு. செல்வநாயகத்தின் அரசியல் கூட்டாளிகள் கூறுகின்றனர்.

## ஜனநாயக சோசலிசவாதி

திரு; செல்வநாயகம் அவர்களின் அரசியல் கூட்டாளிகள் சில சமயங்களில் அவருடைய அரசியல் கருத்துக்களை முற்றாக ஏற்றுக் கொள்வதில்லை. அரசியலில் அவர் வலது சாரியுடையவரென்றும் பழமையைப் பேணுகின்றவர்களின் அடிவரிசையில் உள்ளவர் என்றும் அவரைக் கணிக்கின்றனர். தான் ஒரு ஜனநாயக சோசலிசவாதி என்றும் தனது அரசியல் நோக்கும் லட்சியமும் மகாத்மா காந்தியாலும் 1930ம் ஆண்டுக்குப் பின் சில வருடங்கள் இங்கிலாந்திலிருந்த தொழிற் கட்சியாலும் உருவாக்கப்பட்டது என்று அவரே என்னிடம் கூறினார்;

## வன்முறையின் எதிரி

சாந்த குணமுள்ள திரு: செல்வநாயகம் வன் முறை

# தமிழ் சமுதாயத்தை ஒன்றிணைத்த பெருமையும் அவருக்கேயுண்டு!

களை முற்றாக வெறுக்கிறார். வன் செயலையும் எதேச்சாதிகாரத்தையும் தன்மனதார அறிந்து கொண்டு அவர் ஒருபோதும் ஆதரிக்க மாட்டார். இவை இரண்டும்



அவருடைய மனதுக்கு ஒவ்வாதவை.

திரு. செல்வநாயகம் அவர்களுடைய கட்சியிலுள்ள இளந்துடிப்புள்ள வட்டங்களும் தமிழர் கூட்டணியைச் சேர்ந்த இளந்

துடிப்பு அவ்வளவு இல்லாத வட்டங்களும் இவருடைய சாந்தமான தன்மையை மிகவும் அடக்கத்துடன் மதிக்கின்றனர்.

## சாதிமதம் கடந்தவர்

திரு: செல்வநாயகம் அவர்கள் கிறீஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்; சாதி மதங்களைக் கடந்து மனிதனிடம் அடிப்படையிலுள்ள நற்குணத்தில் தனக்குத் திடமான நம்பிக்கை உண்டென்று அவர் என்னிடம் சொன்னார்.

## நேர்மை

திரு. செல்வநாயகம் அவர்களின் அரசியல் கொள்கைகளைப் பலர் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் ஒருவராவது அவருடைய நேர்மையிலோ நடத்தையிலோ அவ நம்பிக்கைப்பட முடியாது.

1945ம் ஆண்டு அவர் பிரச்சினைகள் நிறைந்த அரசியலில் பிரவேசித்த பொழுது அவர் மாதமொன்றுக்குப் பத்தாயிரம் ரூபாய் சம்பாதிக்கும் ஒரு சிறந்த வழக்குரைஞராக இருந்தார் அப்பொழுதிருந்த வழக்கறிஞர்களில் மிகவும் தெளிவாகச் சிந்திக்கக்கூடிய ஒருவராக அவர் இருந்தார்: வழக்கறிஞர் வட்டாரத்திலும் நீதவான்கள் கூட்டத்திலும் அவருக்குப் பெரிய மதிப்பு இருந்தது பொது வாழ்வில் அவருக்கென்றொரு தனியிடமுண்டு. ஏனெனில் ஒரு அரசியல்வாதி ஆவதற்காக அவர்கள் தன் வாழ்வில் ஒரு கோடீஸ்வரர் ஆகக் கூடிய சந்தர்ப்பத்தை, ஒரு முறை அல்ல இருமுறைகள் உதறித்தள்ளியிருக்கிறார்கள். இன்றைக்கு அவர் தனது செல்வத்தில் பெரும் பாகத்தை இழந்துவிட்டார்கள். ஆனால் அதன் நிமித்தம் அவர் மனக்கசப்பு ஏதும் அடைந்ததில்லை.

## இளமைப் படிப்பு

சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் மலேயாவில் 1898ம் ஆண்டு பிறந்தார். அவருடைய தந்தையார் மலேயாவில் ஒருவர்த்தகராக இருந்தார். திரு; செல்வநாயகம் அவர்கள் சிறுவயதிலேயே தாயாருடனும் தம்பிமார்களுடனும் படிப்பதற்கும் வசிப்பதற்குமாக யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். அவர் தனது இடைநிலைப் பள்ளிப் படிப்பை மவுண்ட் லவினியாவிலுள்ள சென்ற் தோமஸ் கல்லூரியில் பயின்றார்;

அங்கு படிக்கும் போது அவர் தன்னிலும் ஒரு வயது இளையவரான திரு. எஸ்; டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கவைச் சந்தித்துச் சிநேகம் செய்து கொண்டார். கல்லூரியில் படிப்பில் அவர் திறமையுடையவராக விளங்கினர். தமது இருபத்தி ஓராவது வயதுக்கு முன்பே இலண்டன் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியாகி அப்பல்கலைக் கழகத்தின் வயது குறைந்த விஞ்ஞானப் பட்டதாரி என்ற பெருமையைப் பெற்றார்.

## கர்நாடக இசை பயின்றார்

பள்ளிக் கூடத்திலிருக்கும் போது இளம் செல்வநாயகம் கிறிக்கற் விளையாட்டில் மகிழ்ச்சி கண்டார். வயலின் வாத்தியம் வாசிக்கக் கற்றுக் கொண்டார். இன்றும் அவர் விரும்பி இரசிக்கும் கர்நாடக இசையின் நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டார்;

## வேலையை உதறினார்

பல்கலைக் கழகப் படிப்புக்குப் பின்பு அவர் தனது பழைய பாடசாலையில் ஆசிரியராகச் சேர்ந்தார். ஆனால் அங்கு அவர் ஒரு வாரம் தான் படிப்பித்தார். சுகவீன முற்று ஆபத்தான நிலையிலிருந்த தனது தம்பியாரைப் பார்க்கப் போவதற்கு பாடசாலை அதிகாரிகள் அனுமதி வழங்காததால் வேலையை இராஜிநாமாச் செய்து விட்டுச் சென்றார்.

அதன் பின்பு அவர் உவெஸ்லி கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். அங்கு படிப்பித்துக் கொண்டிருக்

(6-ம் பக்கம் பார்க்க)

இந்த நாட்டில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒருவர் மற்றவர்களுடைய மொழியையும் கலாசாரத்தையும் பரஸ்பரம் மதித்துப் போற்றினால் சமாதானத்தடனும் ஒற்றுமையுடனும் ஒருமித்து வாழலாம் என்று திரு. செல்வநாயகம் அவர்கள் நம்புகின்றார்;

## பேச்சுவார்த்தை

அவருடைய கட்சியின் அரசியல் செல்வாக்கு ஏற்றமும் வீழ்ச்சியும் கண்டிருந்த போதிலும் இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக அரசியலில் ஈடுபட்டு வந்துள்ள திரு. செல்வநாயகம் அவர்கள் அப்படி இன்றைக்கும் நம்பிக்கை வைத்திருக்கின்றார் அவர் ஒருவர்தான் சிங்கள மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஒத்துக் கொள்ளுவார். என்று திரு செல்வநாயகம் அவர்களின் அரசியல் ஆதரவாளர்களில் மூத்தவர்களாகிய சிலர் என்னிடம் தெரிவித்தனர். ''அவர் இப்பொழுதும் அவர்களை நேசிக்கிறார். அவர்களில் நம்பிக்கை வைத்திருக்கின்றார். அவருடைய வழக்குரைஞரே ஒரு சிங்களவர் தான். திரு. செல்வநாயகம் அவர்கள் தான் சிங்கள மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும். அவர் ஒருவர்தான் அரசாங்கத்துடன் தான் என்ன ஒப்பந்தத்தைச் செய்து கொண்டாலும் அதைத் தமிழ் மக்களை ஏற்றுக் கொள்ளும்படி சொல்லி அவர்களைத் திருப்திபடுத்த முடியும்'' என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்;

# செல்வாவை வாழ்த்துகிறார் சிலம்புச் செல்வர்!

''இலங்கை வாழ் தமிழினத்தாரின் — தமிழரசுக்கட்சியாரின் தலைவர் திரு; எஸ்; ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் எழுபத்தாறு வயதை அடைகின்றார்; ஆனால் தமிழினத்தின் நன்மைக்காகப் போராடுவதிலே இருபத்தைந்து வயது இளைஞரையும் மிஞ்சி விடுகிறார். பண்பாடுடைய பெருந்தலைவர். உடல் நலிந்தும் குரல் மெலிந்தும், கைகால்களில் நடுக்கம் ஏற்பட்டும், வருந்துகின்ற நிலையிலேயும் தமிழினத்தாரின் நம்பிக்கைக்குரிய ஒரே தலைவராக அவர் இருந்தவருவது வரலாறு காணாத பெருமையாகும்.




அவரோடு பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்த ஒவ்வொரு நேரத்திலும் அவருடைய மன உறுதியைக் கண்டு நான் வியப்படைந்திருக்கிறேன். இலங்கை வாழ் தமிழினத்தார் சோதனை மிக்க ஒரு தருணத்தை நெருங்கியிருக்கின்றனர். முன் எப்போதையும் விட இப்போதுதான் திரு; எஸ்; ஜே. வி. செல்வநாயகத்தின் தலைமையை அவர்கள் உறுதியோடு பற்றிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர்; ஆகவே செல்வநாயகனார் இன்னும் பல்லாண்டுகள் வாழ இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன். அவர் காலத்தில், அவர் தலைமையின் கீழ், இலங்கை வாழ் தமிழினத்தார் உரிமை வாழ்வு பெறுவார்களாக!

— சிலம்புச் செல்வர் ம. பொ. சி.

# ஒப்பற்ற தலைவர் செல்வா!

—முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்—

செல்வநாயகம் எனது நண்பர். அவரது அருந்தொண்டுகளை நான் பல்லாண்டுகளாக நன்கறிவேன். உழைப்பிலே கடுமை, தொண்டிலே தூய்மை, சொல்லிலே உண்மை, உடையிலே எளிமை, வாழ்விலே நேர்மை — என்றால் அது செல்வநாயகம் என்று பொருள். அதனாலேயே அவர் ஈழத்தின் தந்தை என அருமையாக அழைக்கப்பெற்று வருகிறார்.



அவரது எண்ணமெல்லாம் ஒன்றே ஒன்று. அது நாடு செழித்து, மொழி வளர்ந்து மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டுமென்பதே. இந்த ஒரே நோக்கத்திற்காக அவர் பல்லாண்டுகள் இராப்பகலாக உழைத்து வருகிறார்.

ஏறத்தாழ எங்கள் இருவருக்கும் ஒரே வயது என்றாலும் அவர் நாட்டிற்காக, மக்களுக்காக ஓயாது உழைத்து உருக்குலைந்து அதிக வயதினராகவே காணப்படுகிறார். இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களில் பலர் நாடு அழிகிறதே, மொழி அழிகிறதே, வாழ்வு பாழாகிறதே என்று எண்ணி எண்ணி, வருந்தி உடல் நலம் கெட்டு, இளைத்துப் போயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இளைத்துப்போன மக்கள் பலரைக் கண்டதனாலேயே திரு. செல்வநாயகம் அவர்களின் உடலும் இளைத்துப் போய் விட்டதெனத் தெரிகிறது.

நான் இலங்கைக்கு ஏழு தடவைகள் சென்று வந்திருக்கிறேன். அவர் இல்லத்திற்கு நானும், என் இல்லத்திற்கு அவரும் வந்து போனதுண்டு. அப்போதெல்லாம் அவரது அரிய தொண்டுகளைப் பார்த்தும் கேட்டும் அறிந்து வந்திருக்கிறேன். அவற்றையெல்லாம் தொகுத்து ஒரு சொற்றொடரிலேயே கூறவேண்டுமாயின், 'அவர் ஒரு ஒப்பற்ற தலைவர்' எனக்கூறி விடலாம்.

இலங்கை அரசு அவரைப் பல முறை சிறைப்படுத்தியிருக்கிறது. அதில் ஒரு தடவை அரசின் அனுமதி பெற்றுப்பார்க்கச் சென்றிருந்தேன். அவரைச் சுற்றி இரும்புத் தொப்பிகளை அணிந்த பயங்கரமான காவலாளர்கள் சூழ்ந்து கொண்டிருந்தார்கள், அப்போதும், அவர் என்னிடம் பேசிய பேச்சுக்கள் நாடு, மொழி, இனம் பற்றியதாகவே இருந்தது. இது எனக்குப் பெரு வியப்பை அளித்தது.

சென்ற தடவை நான் இலங்கை சென்றிருந்த போது யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரை பல கூட்டங்களில் பேசி வர நேர்ந்தது. அப்போது நான் கூறிவந்த ஒன்று — 'இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வு விரைவில் வளம் பெறவேண்டுமானால்—அதற்குரிய ஒரே வழி, செல்வநாயகம், தொண்டமான், ஜீ. ஜீ. ஆகிய மூவரும் ஒன்று சேர்வதே,' என்பது. அது இப்போது நடைபெறுவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இனித் தமிழ் மக்களின் வெற்றி வெகுதூரத்திலில்லை!

அறிஞர் செல்வநாயகம் அவர்கள் இன்னும் பன்னெடுங்காலம் நல்ல உடல் நலத்துடனிருந்து நாட்டிற்கும் மொழிக்கும் மக்களுக்கும் நற்றொண்டு புரிந்து நல்வாழ்வு வாழ்ந்து சிறப்படைய வேண்டுமென முழு மனத்துடன் வாழ்த்துகிறேன். வாழட்டும் ஈழத் தமிழகம்! வளரட்டும் செல்வாவின் புகழ்!!

# பொதுவாழ்வில் ஈடுபடுவதற்காகக்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் போது சட்டப்படிப்புப் படித்து 1923ம் ஆண்டில் அப்புக்காத்துவாகச் சித்தியடைந்திருந்தார்.

வெகு விரைவில் அவர் ஒரு திறமையான சிவில் வழக்கறிஞராகி அந்தக் காலத்திலே பலரும் தேடிப்போகும் வழக்கறிஞர்களில் ஒருவராக விளங்கினார்.

தமக்குரிய உரிமைகளைக் கொடுக்கும்படி வெள்ளையரைக் கேட்டுத் தமிழ் மக்கள் 1942ம் ஆண்டு திரு. பொன்னம்பலம் அவர்களின் தலைமையின் கீழ் வெள்ளை மாளிகைக்கு விண்ணப்பம் செய்த பொழுது திரு. செல்வநாயகம் அவர்களும் அவ்விண்ணப்பத்தில் கையெழுப்பமிட்டார்.

## 50க்கு 50 போராட்டம்

இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கக்கூடிய வகையில் சிபாரிசு செய்யும் நோக்கத்துடன் சோல்பரி கமிஷன் இங்கு வந்ததையொட்டி திரு. செல்வநாயகம் அவர்கள். தமிழ்க் காங்கிரசைத் தோற்றுவிப்பதற்காக திரு. பொன்னம்பலம் அவர்களுடன் சேர்ந்து வரப்போகும் பாராளுமன்றத்தில் ஐம்பதுக்கு ஐம்பது கொள்கை என்ற அடிப்படையில் போராட்டம் நடத்தினர்.

திரு. பொன்னம்பலம் திரு. செல்வநாயகம் அவர்களை தனது நம்பிக்கையான தளபதியாகத் தேர்ந்தெடுத்திருந்தார். தமிழ் காங்கிரஸ் தனது கோரிக்கையில் வெற்றிபெறவில்லை. 1948ம் ஆண்டு முதலாவது பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர்களில் திரு. செல்வநாயகமும் ஒருவர்.

## தமிழரசு ஆரம்பம்

1948ம் ஆண்டு திரு. பொன்னம்பலம் தனது அரசியல் கருத்துக்களை மாற்றிக்கொண்டு திரு. டி. எஸ் சேனநாயக்காவின் மந்திரிசபையில் கைத்தொழில், கைத்தொழில் ஆராய்ச்சி, மீன்பிடி இலாகா மந்திரியாகப் பதவி ஏற்றார். தனது தலைவர் நிபந்தனை ஏதும் இன்றிப் பதவி ஏற்றதைக் கண்டு திரு. செல்வநாயகம் அவர்கள் மனம் சோர்ந்து போனார். ஆனாலும் அவர் கட்சியை விட்டு விலகாமல் இருந்தார். இந்தியர் பாகிஸ்தானியர் (குடியுரிமை) மசோதாவைப் பாராளுமன்றம் நிறைவேற்றிய போது திரு. செல்வநாயகம் அவர்களும் இன்னும் இருவரும் தமிழ் காங்கிரசை விட்டு வெளியேறித் தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்தனர்.

1952ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவருக்கும் அவருடைய கட்சிக்கும் தோல்வி கிடைத்தது. தான் அடியிலிருந்து ஆரம்பிக்க வேண்டியிருந்தது தான் அதற்குக் காரணம் என்று அவர் விளக்கினார்.

ஆனால் 1956ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் எம். ஈ. பி. யும் ஆட்சியிலிருந்த யூ. என். பி யும் சிங்களத்தை நாட்டின் ஆட்சி மொழியாக்குவதற்கு உறுதியளித்திருந்ததினால் இலங்கைத் தமிழரசுக் கட்சி பத்து இடங்களைப் பெற்றிருந்தது. தமிழ் காங்கிரசுக்கு ஒரு இடம்தான் கிடைத்திருந்தது.

## இனக்கலவரம்

மொழி மசோதாவுக்கு எதிராகத் தமிழரசுக் கட்சி காட்டிய எதிர்ப்பு 1958ம் ஆண்டில் இனக்கலவரத்தில் கொண்டுபோய் திரு. பண்டாரநாயக்காவை அவசரகாலச்சட்டத்தைக்கொண்டு வரச் செய்தது. திரு. செல்வநாயகம் அவர்களும் அவருடைய ஆதரவாளர்களும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

## சத்தியாக்கிரகம்

1961ம் ஆண்டு பெப்பிரவரி மாதத்தில் திருமதி பண்டாரநாயக்கா பிரதமராகவிருந்த காலத்தில் தமிழரசுக் கட்சி ஒரு சத்தியாக்கிரக இயக்கத்தைத் தொடங்கத் தீர்மானித்தது. தனது அறையில் தனியாக இருந்து பிரார்த்தித்த பின்புதான் திரு. செல்வநாயகம் அவர்கள் அப்படிச் செய்வதற்கு முடிவு செய்திருந்தார்.

ஏப்பிரல் மாதம் 18ந் திகதி அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டு திரு. செல்வநாயகம் அவர்களும் மற்றும் தமிழ் அரசுக் கட்சித் தலைவர்களும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். தடுப்புக் காவலில் இருக்கும் பொழுது திரு. செல்வநாயகம் அவர்கள் மிகவும் கடுமையான நோய் வாய்ப்பட்டிருந்தார்.

தடுப்புக்காவலில் வைத்தபடியே அவர் சிகிச்சைக்கு இலண்டனுக்குச் செல்வதற்கு திருமதி பண்டாரநாயக்காவினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தார். 1961ம் ஆண்டில் அவர் இலண்டனில் இருந்து திரும்பினார். அதன் பின்னர் அவரும் அவருடைய கட்சி அங்கத்தினர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

## எதையும் தாங்கும் இதயம்

அவருடைய அரசியல் வாழ்க்கையில் ஏற்பட்ட இவ் ஏற்றத் தாழ்வுகள் அவரிடம் ஏதாவது மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளதா என்று நான் அவரிடம் கேட்டேன். 'இல்லை.' என்ற பதில் வந்தது. மனக் கசப்பினால் எதுவித பலனும் ஏற்படுமென்று நான் கருதவில்லை. மனக்கசப்பு அடைவதில் எதுவித அர்த்தமுமில்லை, மனக்கசப்பு

(8-ம் பக்கம் பார்க்க)

# தமிழர் தந்தைக்கு கவிஞர்கள் சூட்டும் பாமாலை!

எங்கள் தலைவனே! தமிழே வாழ்க!
வெற்றிப் புன்னகை வதனமே வாழ்க!
வீரத் தமிழின் சாரமே வாழ்க!
ஈழத்துக் காந்தியே வாழ்க!

—இரா. விஜயநாதன்

ஃ ஃ

அன்னை தமிழ்பெற்ற அருந்தவப் புதல்வா! செல்வா!
ஆண்டு பல வாழ்ந்து ஆற்றிடுக தமிழ்த்தொண்டு;
இருபத்தேழாண்டாய் எம் அன்னைதுயர் போக்க
ஈழத்தே தாங்கள் பட்டதுன்பங்கள் தாம் எத்தனையோ!
தமிழின் துயர்போக்கி தனிநிலை தமிழ் பெறவே
தனிப்பெருந் தலைவனாக வாழிய செல்வா!
வாழ்க! பல்லாண்டு!

—கே. தியாகமாமணி

ஃ ஃ

என்னுடே பெற்றெடுத்த இனிய தமிழ் முத்தே
பொன்னுடே தந்தையெங்கள் புனிதமான சொத்தே
நம் மக்கள் போற்றுகின்ற நல்லதோரு அணியே
தரணியெல்லாம் பாராட்டும் ஒப்பற்ற மணியே
மக்களின் இதயங்களில் ஒன்றிட்ட தலைவா
மகிழ்வோடு வாழ்வோமே பெங்களது செல்வா
நாயகமாய்த் துலங்குமெங்கள் நற்தமிழன் நீரே
நயவஞ்சகர்க்கே! நல்லவராய் வாழ்பவரும் நீரே:

—சாம்பல் தீவு தேவராஜன்

ஃ ஃ

வாழ்க நீ! எம்மான் இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று தமிழ மக்கள்
தமிழ்த்தாய் ஓலமிட்டழ
பாழ்பட்டு நின்ற தாமோர்
ஈழத் திரு நாட்டை
வாழ்விக்க வந்த தந்தை
செல்வா! நீ வாழ்க வாழ்க

—நிவான் பஞ்சு

ஃ ஃ

இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களெல்லாம்
இழந்திட்ட உரிமைகளை மீட்கவென்று
அந்நாளில் காந்திமகான் காட்டிச்சென்ற
அறப்போரில் அசையாத உறுதிகொண்டு
தன் மானத்தமிழர்களை ஒன்றாய்ச் சேர்த்து
தமிழரசுப் பாசறையை அமைத்தே இங்கு
எந்நாளும் உழைக்கின்ற தந்தை செல்வா
என்றென்றும் வாழ நாம் வாழ்த்துவோமே!

—பொன்கை பா. சிவபாலன்

ஃ ஃ

செந்தமிழ் மைந்தன்—எங்கள்
செருக் களத்து அரிமா!
பைந்தமிழ் பாவலர்தம்
பாட்டுடைத் தலைவன்
சிந்தையில் தெளிவு மிக்கோன்
சீரிய நற் பண்பாளன்,
தந்தையாய் எம்மவர்க்கு
தன்னை அர்ப்பணித்த தங்கம்!

—க. அமிர், முள்ளியவளை

ஃ ஃ

இடரைப் புன்னகைத்து வெல்வான்—எங்கள்
அடிமைத்தளை நீக்க எழுந்த வீரன்
அடிமை விலங்குகளை நொருக்க—மிக
ஆர்வத்தோடு எழுந்த மாவீரன்
அஞ்சாத நெஞ்சுடைய வீரன்—எங்கள்
கண்ணின் மணியொத்த செல்வா.

—காரைநேயன்

ஃ ஃ

அரசியலில் அனுபவத்தில் தமிழர் தம்
ஆட்சி தன்னில் முதிர்ந்த பழமரத்தைப்போல
பெருகிவரும் இன்பமெல்லாம் தமிழனுக்காய்
பிறவியதன் பயனென்றே இழந்த செல்வா
கரை கழுவி அலைபாயும் மாவலியில்
காலமெல்லாம் சேர்மணலின் மணிகள்போல
உரையறியா வெற்றிபெற உன்பணிகளோங்க
உயர் செல்வநாயகமுமை வாழ்த்துகின்றோம்.

—முல்லை ஞானம்.

ஃ ஃ

தந்தையே வாழ்க! தலைவரே வாழ்க!
விந்தைக் கிழவரே! வீரப்புதல்வரே!!
செந்தமிழ் மொழியின் நாயகா! ஈழச்
செருக்களம் நடுவே சிரித்துநிற்பவரே
பைந்தமிழ் மொழிக்காய்ப் பதவியைத்துறந்து
பகைவரை வீழ்த்திய பகலவன் நீரே
நற்தமிழ் அன்னையின் நாயகன் நீரே!
மைந்தரே வாழ்க! மறவரே வாழ்க!!

—திருக்கோணமலைக் கவிராயர்.

ஃ ஃ

## வாழ்க பல்லாண்டு

தாரணி மீதொளிர்
தகைமை சால் தமிழின்
தரணியை ஆண்ட—எம்
தன் தமிழினத்தின்
அடிப்படை உரிமையை
ஆளும் இனம் பறித்து
அடக்கியொடுக்கித்; தம்
அடிமைகளாக்கிடும்
ஆட்சியின் அநீதியை
அவனியோர் அறிந்திட
அண்ணல் காந்தியின்
அகிம்சை வழி நின்று
தளர் நடை பயின்றும்
தளர்ந்திடா நெஞ்சுடன்
தமிழர் தம் உரிமைக்காய்
இன் தமிழ் மொழிக்காய்
உடல் பொருளாவியை
உவந்தளித் துழைக்கும்
இலங்கை வாழ் தமிழரின்
இதயம் வாழ் தலைவா!
ஈழத்துக் காந்தியே!!
ஈடில்லாப் பெரியோய்!
பாரினில் நலமுற; நீ
பல்லாண்டு வாழ்கென
பரமனெம் யேசுவின்
பதமலர் பணிவோம்.

—முருகு

# பலதும் பத்தும்

—கொண்டோடி—

## காங்கேசன்துறை இடைத்தேர்தல் எப்போது?

காங்கேசன்துறைத் தொகுதி உறுப்பினர் பதவியை தந்தை செல்வா ராஜினுமா செய்து 17 திங்கள் முடிந்து விட்டன. இதுபற்றிக் கேட்டால் யாழ்ப்பாணத்தில் மனிதரை மனிதர் பிடித்துச் சாப்பிடாதது ஒன்றைத்தவிர மற்றைய வன்முறையெல்லாம் நடப்பதாகவும் அதனுல் தேர்தலை வைக்க முடியவில்லையென்றும் அரசாங்கக் கட்சியினர் கூறுகிருர்கள்.

இதுவெறும் நொண்டிக் காரணம் என்பது பகிரங்க ரகசியம்!

ஆனுல் உண்மைக் காரணம் என்னவென்பதை, அரசாங்கத்தின் உயர்மட்டச் சிவப்புத் தலைவர் ஒருவர் விருந்தொன்றின் போது தன்னை மறந்து கக்கிவிட்டாராம்!

**வி. பி. இன்னும் இடைத் தேர்தலுக்கு ஆயத்தமில்லை; அவர் தயாரானதும் தான் தேர்தலை நடத்துவோம்—என்ருராம் அந்தச் சிவப்புச் சட்டைக்காரர்!**

ஃ ஃ

## ஆசிரியரும் நிருபராஞர்!

ஒரு பிரபல தமிழ் நாளேட்டின் ஆசிரியரை அங்கிருந்து வெளியேற்ற திட்டமிட்ட சதிவேலைகள் திரைக்குப்பின்னுல் நடைபெறுகிறதாம். குறித்த ஆசிரியருக்கு கொள்ளி சொருக முயற்சிக்கும் நபருடைய கட்டுரைகளே அந்தப் பத்திரிகையின் பக்கங்களை அடிக்கடி—ஏன் அன்ருடம்—அலங்கரிக்கின்றனவாம்! இதற்கு 'சடாமுனி'யும் சகுனி வேலை செய்கிறதாம்! இந்தச் சதியை முறியடிக்க அந்த ஆசிரியரும் பெரிய பெரிய புளியக்கொப்பை எல்லாம் பிடித்துவருகிருர்! இதன்காரணமாக ஆசிரியரே அண்மையில் ஒரு நாள் நிருபராகவும் மாறிஞராம்!

ஃ ஃ

## மொழிக்குள்ள மூன்று விரோதிகள்:

முதல் விரோதி: ஒருவர் மற்றவருடன் உரையாடும்போது இருவரும் ஒரே தாய் மொழியைச் சார்ந்தவர்களாக இருந்தும் யாரா ஒருவர், மற்றவருடன் (தன் தாய் மொழியல்லாத) வேறு மொழியில் பேசுகிருரோ அவர் முதல் விரோதியாவார்.

**இரண்டாவது விரோதி:** ஒருவர் மற்றவர்களுடன் தன் தாய் மொழியில் பேசும்போதே இடை இடையே அந்நிய மொழி வார்த்தைகளைச் சேர்த்தோ, இணைத்தோ பேசிஞல் அவர் இரண்டாவது விரோதியாவார்.

மூன்ருவது விரோதி: ஒருவர் தாய்மொழியில் பேசும்போது வார்த்தைகளைக் கூட்டியோ, குறைத்தோ (சொற்குற்றத்தோடு) பேசிஞல் அவர் மூன்ருவது விரோதியாவார் (உதாரணமாக ''உட்காருங்கள்'' என்பதற்குப் பதிலாக ''உட்காருங்க'' என்பது போன்றவை சொற்குற்றங்களாகும்.)

இதிலிருந்து நம் தாய்மொழியாகிய தமிழ்மொழிக்கு நாம் எந்த வகை விரோதி என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

(சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த மண்வழகர் மன்ற விழாச் சொற்பொழிவில் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை.)

ஃ ஃ

## கிராக்கியோ கிராக்கி!

நோபல் பரிசு பெற்று, ரஷ்ய அரசால் குடியுரிமை பறிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ள அலெக்சாந்தர் சொல் செனித்சின் எழுதிய 'கலாக் தீபகற்பம்' GULAG ARCHIPELGO) என்ற ரஷ்ய கைதிகளின் போர்க்கால நிகழ்ச்சிகளின் வர்ணனைப் புத்தகம் மேற்கு நாடுகளில் விற்பனைக்கு வந்துள்ளது. பிரான்சில் வெளியான ரஷ்ய மொழிப் பிரசுரம் மூன்றே வாரங்களில் விற்று முடிந்தது. சுவிட்சர்லாந்தில் ஒரே வாரத்தில் 50,000 புத்தகங்கள் விற்பனையானதால் மேலும் 260,000 பிரதிகளுக்கு வேண்டுகோள் பறந்தது. ஆங்கிலமொழி பெயர்ப்பு அமெரிக்காவில் வரும் மே மாதம் வெளியாகிறது. ஆனுல் அதற்கு முன் கூட்டியே 10,000 பிரதிகளுக்கு பதிவு செய்யப்பட்டு விட்டதாம். ஆமாப், இப்புத்தகத்தில் அப்படி என்ன இருக்கிறது! 1916 முதல் 1956 வரையில் ரஷ்யாவில் கைதிகள், அரசுக்கு வேண்டாதவர்கள், அரசு எதிர்ப்பாளர்கள் ஆகியோர் எங்ஙனம் கொடுமைப்படுத்தப்பட்டனர் என்பதன் வர்ணனைதான் இதில் இருக்கிறது.

ஃ ஃ

## 'உலகத்தமிழர் குரல்'

அனைத்துலக நாடுகளிலும் பரந்து வாழும் தமிழர்களை மொழிகலை, பண்பாட்டு அடிப்படையில் இணைப்பது, தமிழர்களின் சர்வதேச இயக்கங்களான உலகத்தமிழாராய்ச்சிக்கழகம் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் ஆகியவற்றின் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக நின்று உழைப்பது போன்ற நோக்கங்களைத் தனது இலட்சியங்களாகக் கொண்டு கண்டியிலிருந்து 'உலகத் தமிழர் குரல்' என்ற மாத இதழ் ஒன்று வெளிவரவிருக்கிறது!

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் யாழ். மகாநாட்டின் போது உலகத் தமிழர்கள் பற்றிய கண்காட்சி ஒன்றினை ஏற்படுத்தியவரும் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் நிறுவனரும் அதன் இலங்கைக் கிளை அமைப்புச்செயலாளரும் 'தமிழ் தொண்டருமான' குரும்பசிட்டி இரா. கனகரத்தினத்தை ஆசிரியராகக் கொண்டு அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளி வரவிருக்கும் இதன் முதல், இதழ் அண்மையில் காலமான சிங்கப்பூர் தமிழ் பெரியார் 'தமிழ் வேள்' கோ சாரங்க பாணி அவர்களின் நினைவு இதழாக மலரவிருக்கிறது!

பிரதிகளைப் பெற்றுக் கொள்பவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:— 130 கலைவாணி புத்தக நிலையம் கண்டி.

## குமாரசூரியர் அண்ணைச்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அளித்து வந்த உறுதிமொழி வெறும் புஸ்வாணமாகிவிட்டது.

அப்படியொரு விசாரணைக் கமிஷனை நியமிக்க வேண்டிய அவசியமில்லையென்றும், விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படமாட்டாதென்றும், அரசாங்கத்தின் சார்பில் பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. லக்ஸ்மன் ஜெயக்கொடி அவர்கள் சென்றவாரம் திட்டவட்டமாக அறிவித்து விட்டார்.

''இலங்கைத்தமிழ்மக்களை மட்டுமன்றி—உலகமடங்கப் பரந்துவாழும் கோடிக்கணக்கான தமிழ் மக்களின் உள்ளங்களை குமுறியெழச்செய்த அட்டூழியச் சம்பவம் பற்றி—வெளிநாட்டுப்பேரறிவாளர்கள் கலந்து கொண்ட அனைத்துலகம் தழுவிய ஒருமாநாட்டின் போது நடந்த மிலேச்சத்தனம் பற்றி—நீதி விசாரணை நடத்த முடியாதென அரசு கைவிரித்து, தமிழ் மக்களை உதைத்து தள்ளிவிட்ட பின்னரும்—இந்த அவமானகரமான 'செருப்படி'யையும் வாங்கிக்கொண்டு குமாரசூரியர் இன்னும் ஏன் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கிருர்? அருளப்பலமும், தியாகராசாவும், ஏனைய தமிழர்களும் அரசுடன் ஏன் சார்ந்திருக்கிருர்கள்? -பைந்தமிழினத்தின் சுயமரியாதையை விட பதவிதான் இவர்களுக்குப் பெரிதா?

—இவ்வாறு தமிழ் மக்கள் குமுறலுடன் கேட்கிருர்கள்.

''குமாரசூரியர் மாத்திரமல்ல—பிரதமரின் மகன் அனுரா பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் சென்றிருந்த போது, சென்ற இடமெங்கும் விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படும் என்று உறுதி கொடுத்தார்!

ஆளும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்கிளையின் தலைவர் அல்பிரட் துரையப்பாவை தலைவராகக்கொண்ட யாழ் மாநகர சபை விசாரணைக் கமிஷன் நியமிக்கும்படி கேட்டது—

''26.2.74ல் யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த சிங்கள சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்கள் என்று கூறப்படும் அத்தனை எடுபிடிகளும் அலரி மாளிகைக்கு குமாரசூரியர் தலைமையில் காவடி எடுத்து கமிஷன் நியமிக்கும்படி பிரதமரின் காலைப்பிடித்து வேண்டுகோள் விடுத்தனர்!

ஆளுங்கட்சிகளான லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, ஆகியவற்றின் வடபகுதி கிளைகள்—

அரசாங்கத்துக்கு துதிபாடிவரும் 'முற்போக்கு' எழுத்தாளர் சங்கத்தினர்—

இப்படிப் பலரும் நீதி விசாரணைக் கமிஷன் நியமிக்கும்படி வேண்டுகோள்விடுத்தும் அவற்றை யெல்லாம் குப்பைக் கூடைக்குள் தள்ளிவிட்டு—'கமிஷன் இல்லை' என்று கைவிரித்து விட்டது சிங்கள அரசாங்கம்!

''கமிஷனை அரசாங்கம் நியமிக்கும், நியமிக்கும் என்று நான் தோறும் கிளிப்பிள்ளை போலக்கூறிக்கொண்டிருந்த ஆளுங்கட்சியின் ஆதரவு நாளேடுகள் அனைத்தும் இப்போது வாய் மூடி மௌனியாகி விட்டன!

''இன்னும் ஆளுங்கட்சியுடன் ஒட்டியிருந்து வயிறு வளர்க்கும் தரகர்கள் தமிழ் மக்களை ஏமாற்றமுடியாது''

—இவ்வாறு தமிழ்மாநாட்டின் போது பொலிஸ் தாக்குதலுக்குள்ளாகி அவதிப்பட்ட தமிழர்கள் கூறுகிருர்கள்.

## டிப்புளோமோ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

40%, 50%, 60% புள்ளிகளை எடுத்தால் போதுமானதென அரசாங்கம் முடிவு செய்து, அந்த அடிப்படையில் தெரிவு செய்யப்படுன்ளார்களென நம்பகரமாக அறியப்பட்டுள்ளது. இதுவா திறமை அடிப்படையில் தெரிவுசெய்தல் என்பது! இத்தேர்வு இன அடிப்படையிலேயே. இதனுல் எமது தேசம் உத்தியோக, நிர்வாக, சமூகத் திறமைகளையும் விவேகத்தையும் இழக்கிறது.

(ஆ) 'பல்கலைக் கழகத் தேர்வு பிரதேச அடிப்படையிலும் நடக்கிறது என்பதையும் நாம் ஆராயவேண்டும். யாழ் பெற்ருேர் சங்கம் அறிந்த அளவில், பின் தங்கிய தமிழ் மாவட்டங்களிலிருந்து, ஒப்பிட்டுப் பார்க்கும் போது, எடுபட்ட தமிழ் மாணவர்கள் மிக மிகச் சிலரே, இந்த வருட முடிவுகளைப் பார்த்தால், பிரதேச அடிப்படையில் தெரிவு செய்தல் என்னும் போர்வையில் இன அடிப்படையில் தெரிவு நடக்கிறது. என்னும் யாழ் பெற்ருேர் சங்கத்தின் அபிப்பிராயம் உறுதி செய்யப்பட்டுள்ளது:

'இது தப்பான அபிப்பிராயம் என்ருல் அரசினர் சோதனை முடிவுகளை புள்ளி விபரமாக பாடசாலை, பிரதேச ரீதியில் வெளிப்படுத்தலாம்; தங்கள் மாணவர்கள் எந்தெந்த நிலையை அடைந்துள்ளனர் என்று தலைமை ஆசிரியர்கள் அறிந்திருப்பது நல்லதுமல்லாமல் ஒரு நியாயமான கோரிக்கையுமே.

### 500க்கு 20பேர்

பல்கலைக் கழகத்தில் ஆசிரியர்கள் பயிற்சிபெறும் 'டிப்ளோமா' கல்வியிலும் இனப்பாகுபாடு வேரூன்றியுள்ளது. ஐந்நூறுக்கு அதிகமான ஆசிரியப் பயிற்சியாளர்களுள் இருபதுபேர் மாத்திரம் தமிழர்கள்! என்றும் நடந்திராத பாகுபாடு இவ்வருடம் நடந்திருக்கிறது. இப்பாகுபாடு இந்நாட்டிலுள்ள தமிழ் மாணவர்களின் ஆரம்ப, உயர்தரக் கல்வியை வெகுவாகப் பாதிக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. இவ்வகையான பாகுபாடுள்ள கொள்கைகளை அரசாங்கம் கைவிடுவது இந்நாட்டுக்கு நன்மை தருமென இச்சங்கம் கருதுறதுமல்லாமல், இவைகளுக்குக் கடும் ஆட்சேபமும் தெரிவிக்கிறது.'

—இவ்வாறு யாழ்பெற்ருேர் சங்கச் செயலாளர் வழக்கறிஞர் திரு. சி. பொ. பொன்னையா சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

## தமிழரசுப் பொதுச்சபை கூடுகிறது!

கடந்த செப்டம்பரில் நடைபெற்ற 12வது மாநில மாநாட்டின் பின்னர், தமிழரசுக் கட்சியின் பொதுச்சபை முதன்முதலாக 30.3.74 பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள கட்சித் தலைமை செயலகத்தில் கூடுகிறது. இக்கூட்டத்தில் கட்சியின் மத்திய செயற்குழு தெரிவுசெய்யப்படுவதுடன், இன்றைய அரசியல் நிலைபற்றியும் தீவிர ஆலோசனை நடத்தப்படவுள்ளது.

## தமிழர் கூட்டணி பகிஷ்கரித்தது!

கல்வியமைச்சரின் யாழ்ப்பாண விஜயத்தை தமிழர் கூட்டணி முற்ருகப் பகிஷ்கரித்தது. கல்வியமைச்சர் கலந்து கொண்ட எந்த ஒரு நிகழ்ச்சியிலும் தமிழர் கூட்டணி பா. உ. க்கள் கலந்து கொள்ளாது முற்ருகப் பகிஷ்கரித்தனர்.

## ஒட்டி நின்று...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரியாதிகாரி அண்மையில் கோரியுள்ளார்.

வவுனியாவில் குடியேறி; கூட்டுறவுப் பண்ணையில் இணைந்து வேலைசெய்யக் கூடிய நூறு இளைஞர்களின் பெயர்ப்பட்டியலைத் தருமாறு திரு. ஜெயக்கொடியிடம் அவர் கேட்டிருக்கிருர்.

ஒரு குடும்பத்தில் ஒரு இளைஞருக்கு அதிகமாக பொறுக்கியெடுக்கப்படக்கூடாது என்றும் 18-30 வயதிற்கிடைப்பட்டவராகவும் இருக்க வேண்டுமென்றும் காணியற்ற, வேலையற்ற இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெரியவர்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

துறந்துவிட்டு, இடைத்தேர்தலில் தன் கொள்கை மீது தன்னுடன் போட்டியிட வருமாறு ஆட்சியாளரை அறைகூவி அழைத்துள்ளார்.

காலதேவனின் எல்லைக்கோடுகள் பெரியவரைக்கட்டுப்படுத்தா. காரணம், அவர் உப்புக்கும் புளிக்கும் ஒருவேளைச் சோற்றுக்குமான சாதாரண அபிலாஷைகளை நிறைவேற்ற வாழ்பவரல்ல. பழம்பெரும் இனமொன்றின் தலைவிதியை மாற்ற வாழ்பவர். அவர் பல்லாண்டு வாழ முருகன் அருள்பாலிக்கட்டும்.

## யாழ்ப்பாணத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைப் பிறப்புரிமைச் சான்றிதழ்கள் உண்டு என்ன காரணத்தால் எனது கூப்பன்கள் பறிக்கப்பட்டுள்ளன? இது ஒரு சதி நடவடிக்கையா?

இவ்வாறு அம் மனுவில் கூறப்பட்டுள்ளதுடன் அக் காரியாதிகாரி தக்ககாரணம் கூறவேண்டுமெனவும் காரணம் கோரப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி பா. உ. கே. ஜெயக்கொடி அவர்கள் மனுதாரர்சார்பில் வழக்கில் ஆஜராகின்ருர்.


## வெற்றிக்கு வித்து

''தோல்விக்குத் துணை சோர்வும் சோம்பலும், வெற்றிக்கு வித்து வீரமும் தீரமும்.''

—சுவாமி சித்பவானந்தர்.

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,**

த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.

# தமிழர் நல்லெண்ணத்தைச் சம்பாதிக்கும்

## வாய்ப்பை அரசு நழுவ விட்டது!

### அடிப்படை உரிமையையே மறுத்தது!

## ஈழத்து அரசியலில் 'ஆமாம் சாமி', தமிழர்களின் இனத் துரோகம்!

## இலண்டன் தமிழர்களின் பிரசுரம் பகுதி(2)

(சென்ற வார தொடர்ச்சி)

நான்காவது உலகத் தமிழ் மாநாட்டினை இலங்கையில் நடாத்துவதெனப் பாரிசில் நடைபெற்ற மூன்றாவது மாநாட்டின்போது தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்துக்குத் தூண்டுகோலாயிருந்தவர் அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் தந்தையெனக் கருதப்படக் கூடிய வண. தனிநாயகம் அடிகளார் அவர்களாகும்.

மலேசியாவிலேயே முதலாவது மாநாட்டை வெற்றிகரமாக நடாத்திக் காட்டி விருதுக்குரியவரான அவர், தம் சொந்த நாடான இலங்கையில் அதுவும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வாழையடியாகத் தமிழ் மக்கள் வாழ்ந்துவரும் நாட்டில்—மாநாட்டைச் சிறப்புற நடாத்தலாம் எனத் தீர்மானித்தது புதுமையன்று. ஆனால் ஐரோப்பிய பிரேஞ்சு மண் தந்த ஆதரவை மலேசிய மண் தந்த மகோன்னத ஆதரவை; இந்நாட்டின் மூன்றிலொரு பங்கு மக்களுக்கு இந்த நாட்டு மண் கொடுக்கத் தவறியமைதான் புதுமையானது; கொடுக்க மறுத்தது மட்டுமல்ல மாநாட்டை நடக்கவொட்டாமல் நிர்மூலப் படுத்துவதிலேயே ஆரம்பத்திலிருந்தே அரசு கருத்தாகவிருந்தமை மிகவும் அநாகரிகமானதொரு புதுமையாகும்.

மலேசிய மாநாட்டைத் தொடக்கி வைத்தார் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் அவர்கள். சென்னையில் நடைபெற்ற மாநாட்டைத் தொடக்கி வைத்தவர் இந்திய ஜனாதிபதி ஜாகிர் ஹுசேன் அவர்கள். இலங்கையில் மாநாட்டைத் தொடக்கி வைக்கும்படி ஜனாதிபதி வில்லியம் கோபல்லாவ அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். இருப்பினும் அழைப்பு நிராகரிக்கப்பட்டது. இவ்விடயத்தில் அரசு நாகரிகத்துடனும் பெருந்தன்மையுடனும் நடந்து கொள்ளவில்லை. அத்துடன் பிரதம அமைச்சர்களுக்கும் விடுக்கப்பட்டிருந்த அழைப்புக்கள் கூட நிராகரிக்கப்பட்டன.

சிறுபான்மையினத்தின்பால் நல்லெண்ணத்தைக் காட்டவும் இன ஒற்றுமையை வளர்க்கவும் இதைவிட வாய்ப்புள்ள வேறு சந்தர்ப்பம் அரசுக்குக் கிடைத்திருக்க முடியாது. கிடைத்த வாய்ப்பையும் போட்டுடைத்த பேதமைக்கு அரசு பெரிதும் கழிவிரக்கப்படவேண்டும்!

அரசாங்கத்திலிருந்து ஒரேயொரு தமிழ் அமைச்சரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. மாநாட்டுக்கு அவரையாவது அரசு 'அனுப்பி வைத்திருக்கலாம். அந்த மனப்பக்குவம் அரசுக்கோ அமைச்சருக்கோ ஏற்படாது போயினமை துர்ப்பாக்கியமே.

'ஆமாம் சாமித்' தமிழர்கள்

இம்மாநாட்டின் தொடர்பில் அரசின் கெடுபிடிகளுக்கெல்லாம் "ஆமாம்" போட்ட தமிழர்கள் சிலர் இக்கட்டுரையில் ஆங்காங்கே தோற்றுவதால், அத்தகைய அணியினரின் உளப்பாங்கை அடையாளம் காட்டுவதும் அவசியமாகிறது.

இலங்கைத் தமிழ் மக்களின் மிகவும் சின்னஞ்சிறிய ஒரு வட்டத்தினர் இந்த 'ஆமாஞ் சாமி'களாக இருந்தனர். இவர்களில் தேர்தலில் போட்டியிடாமலே அமைச்சரான திரு. குமாரசூரியர், யாழ்ப்பாணம் மேயர் திரு. துரையப்பா என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். அரசு கிள்ளித் தெளிக்கும் அற்ப சலுகைகளுக்காக அரசினை அண்டிப் பிழைக்கும் இவர்கள், அரசு தமிழ் விரோத நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளைகளிலும் கூட அரசுக்கு ஆமாம்போட்டவர்களே தவிர, தம் இனத்திற்காக அனுதாபப்பட்டவர்களல்ல. இதனால், தமிழ் மாநிலமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இவர்கள் நடமாடுவது அபூர்வம். நடமாடினும் பொலிஸ், இராணுவப் பரிவாரங்களுடன் தான் நடமாடுவார்கள்.

மானப்பிரச்சினை

மாநாட்டை நடாத்துவது யாழ்ப்பாணத்திலா அல்லது கொழும்பிலா? இந்தக் கேள்வியுடனேயே இம்மாநாட்டுக்கு எதிரான அபசுரம் முதன் முதலில் ஒலிக்கத்தொடங்கியது; இம்மாநாட்டைத் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழும் வடக்கு மாகாணத்தின் தலைநகரில் நடாத்தவேண்டுமெனத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் இலங்கைக் கிளை இயல்பாகவே ஏற்கனவே தீர்மானித்திருந்தது. தமிழ் மக்களின் உணர்வுகளை மதியாத அரசு ஏனோ அதனைக் கொழும்பில் நடாத்த வேண்டுமெனக் கூறியது; யாழ்ப்பாணம் இலங்கையின் ஒரு பகுதிதான் என்ற பூகோள அரசியல் யதார்த்த உண்மையை அரசு ஏனோ பிடிவாதமாக உணர மறுத்தது;

தமது மாநாட்டைத் தமிழ் மக்கள் தாம் விரும்பும் எப்பகுதியிலாயினும் நடாத்துவதற்குள்ள அடிப்படை உரிமையையே, அரசு என்று நிராகரித்துப் பேசத் தலைப்பட்டதோ அன்றே அதன் வாதங்களின் தார்மீக வலிமையும் வளர்ந்து விட்டது? கொழும்பிலா யாழ்ப்பாணத்திலா? என்ற கேள்வியை ஒரு மானப் பிரச்சினையாக்கிக் கடைசி வரையில் குழப்பியடித்தது தனிப்பட்ட ஒருவரின் தகுதிக்கு ஏற்றதாக இருக்கலாம்; ஆனால், ஓர் அரசாங்கம் பெருந்தன்மையுடன் நடந்திருக்கவேண்டும்; சிறிய விஷயங்களில் தன் செல்வாக்கைப் பரீட்சித்துப் பார்க்க முற்பட்டிருக்கக் கூடாது; முற்பட்டு, மூக்குடைபட்டிருக்கக் கூடாது.

தமிழாராய்ச்சி மாநாடு தமிழ்ச் சூழ்நிலையில்—தமிழ் மணம் கமழும் மண்ணில்—தாமும் பங்கு கொள்ளும் உணர்வினைத் தமிழ் மக்கள் பெறத்தக்கதாய்—நடைபெறவேண்டுமென்று தமிழாராய்ச்சிக் கழகம் அரசுக்கு அளித்த பதில் தர்க்க ரீதியானதாகும். தவிரவும் மாநாடு நடைபெற்ற ஏழு நாட்களிலும் இந்திரலோகமோ எனப் பிரமிக்கத்தக்கதாய் யாழ்ப்பாண மாநகரம் முழுவதையும்—ஏன் மாவட்டம் முழுவதையுமே—உருமாற்றிவைத்த பொதுமக்களின் உணர்ச்சிப் பிரவாகமும் எழுச்சிக் கோலமும் தமிழாராய்ச்சிக் கழகம் அரசுக்கு அளித்த பதிலைப் பட்ட வர்த்தனமாக மெய்ப்பித்து விட்டன;

—வளரும்

## தெய்வ மனிதர்

தந்தை செல்வா என்பது ஈழத்தில் உள்ள முப்பது இலட்சம் தமிழர்களை காவல் செய்யும் மந்திரமாகும். எனது பதினைந்தாவது வயதில் என்று நினைக்கிறேன்; ஆம் — அப்போதுதான் நான் முதன் முதலில் இந்த மந்திரத்தின் ஒலியைக் கேட்டேன்: அன்றிலிருந்து இன்றுவரை தந்தை செல்வா என்னும் மந்திரத்தின் இயக்கத்துள் நான் இருக்கிறேன்.

மானத்தின் ஆணிவேரால் — வீரத்தின் மற்றொரு பேராய்—அடிமைத் தனத்தை வெறுக்கும் சாவு மணியாய்—அழகு தமிழ்க் குலத்தைக் காக்கும் நெல்லிக் கனியாய்—அமைதியின் வடிவாய் — அநீதியின் முடிவாய் — தோன்றுகிறார் தந்தை செல்வா.

அவர் ஓர் உலக மனிதர்; உலகின் எந்த மூலையில் அடிமைகள் எனப்படுவோர் எந்தக் கோலத்தில் இருந்தாலும், இந்த ஒல்லியான மனித வடிவம் அவர்களுக்கெல்லாம் நம்பிக்கை தரும் ஒரு தெய்வ வடிவம் என்றே கூறுவேன்;

பலமற்ற, மனிதன் கூட அடிமைத்தனத்தை எதிர்த்து படை நடத்தியே தீருவான் என்பதை மிகச் சிறிய ஈழத்தமிழ் பேசும் இனத்தின் தலைவராக இருந்து நிரூபித்து காட்டுகிறார் தந்தை செல்வா.

"அறம்தான் மனிதனைக் காப்பாற்றுகிறது. அந்த அறத்தை மனிதன் காப்பாற்றுகிறான் இல்லையே—" என்று உலகில் நிகழும் ஒவ்வொரு கொடுமைக்காகவும் ஏங்கி உயிர்த்து, உளமுடைந்து வருந்தும் செல்வா அறம் ஒன்றே ஆவியாய், மூச்சாய், அணுக்கமாய் குருதியாய் அகமாய், புறமாய் அனைத்துமாய்த் திகழ்கிறார்.

மணி மணியாக வேதனை மனிதர்களின் நிலைகளைத் தனித்தனி ஆராய்ந்து, மொழியடிப்படையிலான இன விடுதலையின் முக்கியத்துவம் உணர்ந்து — தந்தை செல்வா, ஈழத்தமிழினத்தின் பிணி தீர்க்கும் பெரு மருந்தாக விளங்குகிறார்.

இளமஞ்சள் வண்ணக்குழம்பில் பொன்னைச் சிறுதுளி கலந்தாற்போல் ஒளிவிடும் அந்தக் கிழவனின் முகத்தில் தாயின் கனிவும் பார்வையும், குழந்தையின் பிஞ்சுச் சிரிப்பும் ஒருங்கே காட்சி தரும் சிறப்பு தனிச் சிறப்பே. தெய்வ மனிதராக ஈழத்தமிழர் கண்களுக்கு காட்சி தருகிறார் தந்தை செல்வா!

காசி ஆனந்தன்

## பொதுவாழ்வில் ஈடுபடுவதாகக்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அடையாமல் எதையும் தாங்கிக் கொள்வது என் இயல்பு.' என்று சாந்தமாகக் கூறி முடித்தார்.

1965ல் திரு. டட்லி சேனநாயக்காவின் அரசாங்கத்துடன் சேர்வதற்கு திரு. செல்வநாயகம் அவர்கள் தீர்மானித்தார். நீதிமன்றங்களிலும் பரிபாலனங்களிலும் தமிழ்மொழிக்கு உரிய இடம் அளித்து தமிழ் மொழிக்கு மாவட்ட அந்தஸ்து கொடுப்பதென்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்க உதவியுடன் குடியேற்றம் செய்யப்படுவதில்லை என்றும் திரு சேனநாயக்காவின் அரசாங்கம் வாக்குறுதி கொடுத்திருந்ததுதான் அதற்குக் காரணம் என்று அவர் கூறினார்.

திரு: சேனநாயக்காவின் அரசாங்கம் இவ்வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதினால்தான் 1968ம் ஆண்டு செப்டம்பரில் தாங்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேறியதற்குக் காரணம் என்றும் அவர் என்னிடம் தெரிவித்தார்;

பதவியைவிட்டு விலகினார்

1970ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திரு: செல்வநாயகத்தின் கட்சி பதின்மூன்று இடங்களைக் கைப்பற்றியது. புதிய அரசியல் அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக சென்ற ஆண்டு அவர் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தார்.

தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் புதிய அரசியல் அமைப்பு மறுக்கிறது என்று அவர் சொல்லுகின்றார்; தனது தொகுதியாகிய காங்கேசன்துறைத் தொகுதிக்கு இடைத் தேர்தல் நடைபெறும் பொழுது தான் போட்டியிடப் போவதாக அவர் தெரிவித்தார்.

தமிழர் ஒன்றுபட்டனர்

கடந்த ஆண்டில் தமிழர் கூட்டு முன்னணி உருவாக்கப்பட்டது. அதன் மூலம் வடக்கிலும், கிழக்கிலும், மலைநாட்டுப் பகுதியிலும் வாழும் தமிழ் மக்கள் யாவரும் ஒன்று சேர்க்கப்பட்டனர். முதன் முதலாக தமிழ் மக்களிடையே எழுபத்தி ஐந்து சதவீதம் ஒற்றுமை ஏற்றுமை ஏற்பட்டுள்ளதையிட்டுத் தான் மகிழ்ச்சியடைந்துள்ளதாகத் திரு. செல்வநாயகம் சொன்னார்;

'எங்களுடைய உரிமைகளை வழங்கினால் நாங்கள் ஒரு தனி நாடு கோரமாட்டோம். அப்படிக் கொடுக்காமல் விட்டால் தனிநாடு கோருவதைவிட எமக்கு வேறு வழி இல்லை." — என்று கூறுகிறார் திரு. செல்வநாயகம்.

எழுபத்தி ஐந்து வயது ஆகியும் தன்னுடைய மக்களுக்கே உரித்தானது என்று திரு. செல்வநாயகம் கருதுகின்றார். தன்னுடைய மக்களை ஒருபோதும் கைவிடக் கூடாது என்ற உறுதி அவருடைய மனதில் கூறிக்கொண்டிருப்பதாக அவர் உணருகின்றார்.

இதனாலேயே அவர் உயர் நீதி மன்றத்திலே தனக்குக் கிடைத்த பதவியை வேண்டாமென்று மறுத்திருந்தார். தனது செழிப்பான தொழிலையும் வளமான வாழ்வையும் அதற்காகவே தியாகம் செய்தார்.

திரு. செல்வநாயகம் அவர்களுடைய அரசியல் கொள்கைகளை எல்லாரும் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம்; ஆனால், அவருடைய நேர்மையையும் அர்ப்பணத்தையும் அவருடைய நண்பர்களினாலும் சரி விரோதிகளினாலும் சரி வியக்காமல் இருக்க முடியாது.

நம்பிக்கை

"மனித உள்ளத்திலே நம்பிக்கை எப்பொழுதும் ஊற்றெடுத்துக் கொண்டே இருக்கும். தமிழ் மக்களும் சிங்கள மக்களும் தங்களுடைய வேற்றுமைகளை இனியும் தீர்க்கக் கூடும் என்ற நம்பிக்கை இன்றும் என் மனதில் இருந்து வருகின்றது." என்று தன் வாழ்வுப் பாதையின் கடைசிப் படிகளில் நடந்துகொண்டிருக்கும் திரு. செல்வநாயகம் அவர்கள் என்னிடம் மிகவும் அமைதியாகக் கூறினார்.

தமிழ் மக்களின் பலத்தையும் பலயின்மையையும் திரு. செல்வநாயகம் அவர்கள் ஒருங்கே பிரதிபலிக்கிறார் என்று பலர் கருதுகின்றனர்.

அரசியல் நடைமுறைகளுக்கு ஏற்றவாறு அவர் தனது கருத்துக்களை அமைத்துக் கொள்ளவில்லைதான்; ஆனால் அவர் சாத்விகத்தை அவருடைய ஆதரவாளர்கள் எப்படியிருந்தாலும் — ஒரு அரசியல் கொள்கையாக, சமயம் மாறிய ஒருவனின் பக்தி சிரத்தையுடன்; உறுதியாக அணைத்துக் கொண்டிருக்கிறார்.

வன்முறைகள் அவருடைய காந்திய இயல்புக்கு முற்றும் மாறானவை. எழுபத்தி ஐந்து வயதான திரு. செல்வநாயகம் அவர்கள் வேதாகமத்தில் காணப்படும் பிதாக்களைப் போன்று இரக்கமும் சாந்தமும் நிறைந்த ஒரு ஞானியாக விளங்குகின்றார்.

—தமிழில் தந்தவர்:—

அருள். மா. இரா.

காசி ஆனந்தன்
வண்ணை ஆனந்தன்
சிறையில் இன்று
653-வது நாள்

# எத்தனை காலம் தான் ஏமாற்றுவீர் இந்த நாட்டிலே...?

அன்பு நண்பா,

'எத்தனை காலம்தான் ஏமாற்றுவீர் இந்த நாட்டிலே-சொந்த நாட்டிலே' — என்கிற திரைப்படப்பாடல் நினைவிருக்கிறதா உனக்கு? மறைந்த நடிகர் கே. ஆர். ராமசாமி அந்தப் பாடலைப் பாடுவதாக நினைவு! நம் தங்கத் தமிழ் ஈழத்தில் வட்டமிட்டும் கொட்டமடித்தும் வருகின்ற தமிழ் சமுதாயத்திலுள்ள வல்லூறுகளை—சிங்கள ஏகாதிபத்தியத்தின் தரகர்களை— காட்டிக் கொடுத்து வயிறு வளர்த்திடும் கங்காணிகளை—எண்ணிடும் போதெல்லாம் எனக்கு மேற்கண்ட பாடலே வழமையாக நினைவுக்கு வந்திடும்!

ஆமாம் நண்பா, எச்சில் இலைக்காக-எலும்புத் துண்டுக்காக-இனத்தையும் மொழியையும் காட்டிக் கொடுத்திடும் இழிதகையோர் கூட்டம் எத்தனை நாளைக்குத்தான் தமிழர் சமுதாயத்தை ஏமாற்றிட முடியும்? எத்திப் பிழைத்திடமுடியும்? தமிழ்ப் பகைவர்களை நத்தி வாழ்ந்திட முடியும்?

''ஊன வயிற்றுப் பசி பெரிதோ—அட
உள்ளம் வளர்த்த மொழி பெரிதோ
ஊனத்தசையின் உடல் பெரிதோ—எங்கள்
இன்பத் தமிழினுயிர் பெரிதோ?
பானைச்சோறுதான் பெரிதோ — அட
பண்டைத் தமிழின் சுவை பெரிதோ?'

என்று கேட்டு உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் வழியில் தமிழினம் உணர்ச்சி கொண்டெழுந்தால் — இனத்துரோகிகளினதும் எட்டப்பர் கூட்டத்தினதும் ஏமாற்றும் கண்துடைப்பும் கயமைத்தனங்களும் எத்தனை நாளைக்குத் தான் தமிழர் சமுதாயத்தில் விலை போக முடியும்?

தமிழ் சமுதாயம், எப்போதாவது உணர்ச்சித் துடிப்புக் கொண்டு சீறியெழுந்திடும் போது—அந்தச் சீற்றத்திலிருந்து தற்காலிகமாகத் தப்பித்துக்கொள்ள ஓடுகிறார்கள் — ஆடுகிறார்கள்—தமிழ் இனத்துக்காக நீலிக்கண்ணீர் வடித்து அறிக்கைக்குமேல் அறிக்கை விடுகிறார்கள். தங்கள் 'எசமானர்களைத்' தஞ்சமடைந்து கதறிக் கூத்தாடுகிறார்கள்; ஒப்புக்கு அழுது தீர்த்திடுகிறார்கள்! தங்களுக்குள் எலும்புத்துண்டு போடும் ஏகாதிபத்தியத்திடம் சென்று மண்டியிட்டு தங்கள் 'முகத்தை' காப்பாற்றிக்கொள்ள முனைகிறார்கள்! இந்த எட்டப்பர் கூட்டத்தினரின் — நடிப்புச் சுதேசிகளின்— ஆஷாடபூதித்தனத்துக்கு — அவர்கள் விடுக்கும் மாய்மால அறிக்கைகளுக்கு—கொட்டை எழுத்துக்களில்முக்கியத்துவம்கொடுத்துப் பிரசுரித்து — அவர்களைக் காப்பாற்றிடப் பாடுபடுகின்றன அரசாங்கத்தின் ஊதுகுழல்களான இந்நாட்டு நாளேடுகள்! இவர்களைப் பார்த்துத்தான் பாவேந்தர் பாரதிதாசன்,

'தமிழ் அழிப்பார் எனினும் அவர்
தமிழ் வளர்ப்போம் என்றுரைத்துத்
தனை வியப்பார்!''

இத்தகைய இனத்துரோகிகள் — எட்டப்பர் திருக்கூட்டத்தினர்-கட்டிவிடுகின்றபொய்க் கோட்டைகள் எல்லாம் சிறிது காலத்தில் பொலபொலவென இடிந்து கொட்டிவிடுகின்றன; இவர்களது வேஷம் கலைந்துவிடுகிறது - 'இயலாமை' அம்பலமாகிவிடுகிறது! ஆனாலும், தமிழ் மக்களின் 'மறதி'யில் இவர்களுக்கு அசையாத நம்பிக்கை போலும்! தமிழ் சமுதாயம் வெறும் ஏமாவிச் சமுதாயம் என்பது இவர்களின் கணிப்புப் போலும்!

நண்பா, சனவரி 10- நினைவிருக்கிறது தானே உனக்கு? வீரசிங்கம் மண்டபத்தின் முன்னே வெளிநாட்டுத் தமிழறிஞர்களின் தமிழ் முழக்கம் கேட்கவென வந்திருந்த இலட்சோபலட்சம் தமிழ் மக்கள் மீது பொலிசார் நடத்திய காட்டுமிராண்டித்தனமான — மிருக வெறித் தாக்குதலை நேரடியாகக் கண்டும், அனுபவித்தும், கேட்டும் அறிந்தும் தமிழ் சமுதாயம் பொங்கியெழுந்தது! குமுறித் திரண்டது! அடுக்குமா இது — நடக்கலாமா இது— அனுமதிக்கலாமா இதை — தமிழன் என்ன இளிச்சவாயனா—என்றெல்லாம் கேட்டு, தமிழர்கள் தோள்தட்டி ஆர்ப்பரித்து எழுந்தனர்! தமிழன் தாக்கப்பட்டது குறித்து— தமிழ் மாதர் தமிழ் நாட்டிலேயே மானபங்கப் பட நேர்ந்தது குறித்து — தமிழர்கள் உயிர் இழந்தது குறித்து—பாரபட்சமற்ற நீதி விசாரணை நடத்தப்படவேண்டும்—அரசே! நீதியின் பெயரால் இதைச் செய்! என்று தமிழ் சமுதாயம் ஒன்றுபட்டுக் குரல் கொடுத்தது!

தமிழ் சமுதாயத்தின் இந்த எழுச்சியை— ஒன்றுபட்ட உணர்ச்சியை — எதிர்த்து, எதிர் நீச்சல் போடமுடியுமா அரசுக்கு வால்பிடித்து வயிறு கழுவும் தரகர்களால்? எனவேதான் 'ஒப்புக்காக' அவர்களும் தமிழ் மக்களுடன் சேர்ந்து குரல் கொடுத்திடத் துவங்கினர்!;

குமாரசூரியர் பெட்டைக் கோழி போலக் கொக்கரித்திடத் தொடங்கினார்! பிரதமரிடம் ஓடோடிச் சென்றார்—பிரதமரைச் சந்தித்த பின்னர், யாழ் நீதவானின் மரணவிசாரணைத் தீர்ப்பு வந்தபின்னர், அரசாங்கம் அடுத்த நடவடிக்கையெடுக்கும் என்று பிரதமர் தம்மிடம் கூறியிருப்பதாக அறிக்கை விடுத்தார்.

இதுமட்டுமா நண்பா—யாழ்ப்பாணத்துக்கு சென்று ஒருநாள் முழுவதும் தங்கியிருந்து, தமிழாராய்ச்சி மாநாட்டுடன் தொடர்புபட்ட சம்பவங்களையெல்லாம் குமாரசூரியர் நேரடியாக விசாரித்தறிந்ததாக நாளேடுகள் கொட்டை எழுத்துக்களில் குமாரசூரியரின் படத்துடன் செய்திகள் போட்டன? அந்த நேரத்தில் குமாரசூரியர் என்ன கூறியிருந்தார் தெரியுமா?

"நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் இறுதிநாளான சனவரி 10ல் யாழ்ப்பாணத்தில் நடந்த துரதிர்ஷ்ட சம்பவம் பற்றி அரசாங்கம் பாரபட்சமற்ற பொது விசாரணை நடத்தும்!"
(தினபதி தலைப்புச் செய்தி 24.1.74)

இப்படி வெட்டொன்று துண்டிரண்டாக-தானே அரசாங்கத்தை கொண்டு நடத்துபவர் போல திட்டவட்டமாக அறிக்கை விடுத்தார் குமாரசூரியர்!

## அரசியல் மேடை

நண்பா, இதெல்லாம் யாழ் நீதவானின் தீர்ப்பு வருவதற்கு முன்னர் கூறியவை—தீர்ப்பு வந்த பின்னர்தான் விசாரணைக் குழுதேவையில்லை என்ற முடிவுக்கு வந்தோம் என்று கூறிவிட்டும் குமாரசூரியர் தப்பிக்கொள்ள முடியாது!

நீதவான் தீர்ப்பு வந்தபின்னர், (20-2-74) அரசாங்க ஊதுகுழல் தினகரனில் குமாரசூரியரின் செய்தியொன்று படத்துடன் பிரசுரிக்கப் பட்டுள்ளது. அதிலே அவர் என்ன கூறுகிறார்— கேள்!

''யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டு அசம்பாவிதங்களின் பின்னணிகளை ஆழ்ந்து ஆராய வேண்டிய கடமை பொது மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் உள்ளது. எம்மைப் பொறுத்தமட்டில், கட்சி அமைப்பாளர்கள் பொது ஸ்தாபனங்கள், பொது மக்கள், இன்னும் வலியுறுத்திக் கொண்டுவரும் விசாரணையை அரசாங்கம் மேற்கொண்டு — ஆக வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பது எமது கடமையாகத் தோன்றுகிறது.''

ஆம் நண்பா, விசாரணைக் கமிஷன் ஒன்றை அரசாங்கம் நியமிக்கவேண்டியது அதன் கடமை — என்று கூறியிருக்கிறார் குமாரசூரியர் — நீதவான் தீர்ப்பு வெளி வந்த பின்னர்!

குமாரசூரியர் மட்டுமல்ல நண்பா—ஆளுங் கட்சியின் எடுபிடியான ஆள்பிரட்(டி) துரையப்பரை தலைவராகக் கொண்ட யாழ் மாநகர சபை நீதி விசாரணை நடத்தும்படி அரசாங்கத்தைக் கோரித்தீர்மானம் நிறைவேற்றியது!

அரசாங்கத்தின் அங்கமாக இருக்கும் பீட்டர் கெனமனின் 'நேர்மையற்ற' கம்யூனிஸ்ட்கட்சி, மதில் மேல் பூனையாக இருந்து வரும் டாக்டர் விக்கிரமசிங்காவின் 'தீவிர' கம்யூனிஸ்ட் கட்சி-மாஜி சம அந்தஸ்து வீரரின் லங்கா சமசமாஜக் கட்சி, சிங்கள சிறீலங்கா சுதந்திரக்கட்சி—ஆகிய சிங்களத் தலைமையைக் கொண்ட தென்னிலங்கைக் கட்சிகளின் வட பகுதிக்கிளைகள், 'விசாரணைக் கமிஷன்' நியமிக்கும்படி கோரியிருப்பதாக ஏடுகளில் செய்திகள் வந்தன!

ஆளுங்கட்சிகளின் அடிநக்கி வரும் 'முற்போக்கு' எழுத்தாளர் சங்கமும் விசாரணைக் குழு நியமிக்கும்படி கோரியிருந்தது!

யாழ்ப்பாணம் சென்றிருந்த பிரதமரின் திருமகனார் அனுரா பண்டாரநாயக்கா கூட — தங்கள் தரகர்களை காப்பாற்றும் நோக்குடனோ என்னவோ — மேடைக்கு மேடை — இடத்துக்கு இடம் நீதி விசாரணைக்குழு நிச்சயம் நியமிக்கப்படும் என்று முழங்கித்தள்ளி விட்டுத் திரும்பினார்!

இது மட்டுமல்ல நண்பா—26. 2. 74ல் வட மாகாணத்தைச் சேர்ந்த சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் என்று கூறப்படும் அத்தனை தரகர்களும், செல்லையா குமாரசூரியர் தலைமையில் ஒன்றாகச் சென்று அலரிமாளிகைக்கு காவடி எடுத்து பிரதமரைச் சந்தித்துப் பேசிய போதும் விசாரணைக்குழு நியமிக்கும்படி தாம் வற்புறுத்தியதாக அறிக்கை விடுத்தார்கள்!

இவர்களது வேண்டுகோள்கள் அறிக்கைகள், தீர்மானங்கள் மகஜர்கள், அத்தனையும் இப்போது புஸ் வாணமாகிவிட்டன! இவர்களுக்கு அரசாங்கத்தில் துளியும் மதிப்பில்லை- இவர்களை சிங்கள ஆட்சி ஒரு பொருட்டாக கருதுவதேயில்லை; இவர்கள் ரோசம், மானமின்றி, வெறும் சுயநலத்துக்காகவே சிங்களக் கட்சிகளிலும், சிங்கள அரசாங்கத்திலும் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை — இப்போது காலம் மீண்டும் ஒருமுறை ஆதார பூர்வமாக உணர்த்திவிட்டது!

ஆம், இவர்களது முகத்தில் கரிபூசுவது போல—இவர்களை சல்லிக்காசுக்குக்கூட அரசாங்கம் பொருட்படுத்துவதில்லை என்பதைக் காட்டுவதைப் போல — தமிழாராய்ச்சி மாநாட்டுச் சம்பவம் குறித்து நீதிவிசாரணை கமிஷன் எதையும் அரசாங்கம் நியமிக்க மாட்டாது என்று பாதுகாப்பு துணை அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி அவர்கள் எவ்வித ஐயத்துக்குமிடமின்றி திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார்!

திரு லக்ஸ்மன் ஜெயக்கொடியின் இந்த அறிவிப்பு — ஆளும் கட்சியுடன் ஒட்டி உறவாடும் இனத்துரோகக் கும்பலுக்கு விழுந்த செருப்படியே தவிர வேறில்லை!

இந்தச் செருப்படி விழுந்த பின்னரும்— மானம், ரோசம், சூடு சொரணை, கொஞ்சம் கூட இன்றி, அடிமைகளாக — ஆமாம் சாமிகளாக — சிங்களக் கட்சிகளிலும் சிங்கள ஆட்சியுடனும் ஒட்டிக்கொண்டிருந்து—தமிழினத்துக்கு மீளா அவமானம் தேடி வருகிறார்கள் இந்த வெட்கம்கெட்ட பிறவிகள்!

வெட்கம் ரோசம் இருந்தால் அல்லவா— அவர்களுக்கு—என்பாய்! உண்மைதான்! நான் ஆரம்பத்திலேயே கூறினேனே — தமிழ் சமுதாயத்துக்கு உணர்ச்சியும் ஆக்ரோஷமும் ஏற்படும்போது, அதற்கு முன் தாக்குப் பிடித்திட முடியாது 'ஒப்புக்காக' சேர்ந்து அழுது ஏமாற்றுவதே இந்த எட்டப்பர்களின் வேலையென்று. தமிழாராய்ச்சி மாநாட்டின்போது நடந்த வரலாறுகாணாத பயங்கரக் கொடுமை காரணமாக தமிழ் சமுதாயத்தின் மத்தியில் எழுந்த உணர்ச்சிப் பிரவாகத்துக்கு தாக்குப்பிடிக்க முடியாமல்—அதிலிருந்து தற்காலிகமாகத் தப்பிக்கொள்வதற்கே — இவர்கள் விசாரணைக் கமிஷன் பற்றி இதுவரை போலி நாடகமாடி வந்திருக்கிறார்கள் என்ற உண்மை இப்போது அம்பலமாகிவிட்டதல்லவா?

நண்பா, நம்மைப் பொறுத்தவரை — விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட மாட்டாது என்ற லக்ஸ்மன் ஜெயக்கொடியின் அறிவிப்பு நமக்கு எவ்வித ஆச்சரியத்தையும் ஏற்படுத்திடவில்லை! இது நாம் ஏற்கெனவே எதிர்பார்த்த ஒன்றுதான்! அரசாங்கம் அப்படித்தான் விசாரணைக் குழு ஒன்றை அமைத்திடினும் கூட—அது பாரபட்சமின்றி செயற்படுமென்பதிலோ—நீதியை வழங்கிடும் என்பதிலோ—நமக்கு பூரண நம்பிக்கை கிடையாது!

இதன் காரணமாகவே ஓய்வுபெற்ற இரு உயர் நீதிமன்ற நீதியரசர்கள், ஓர் மதத் தலைவர் ஆகியோரைக் கொண்ட விசாரணை குழுவொன்றை யாழ்ப்பாண மக்கள் நியமித்தனர்! தமிழாராய்ச்சி மாநாட்டு சம்பவங்கள் பற்றி அந்தக் குழு விசாரித்து தீர்ப்பும் வழங்கி விட்டது. அந்தத் தீர்ப்பு — தமிழாராய்ச்சி மாநாட்டுச் சம்பவங்களை மட்டும் நமக்கு எடுத்துக் கூறவில்லை—ஈழத் தமிழினம் எவ்வாறெல்லாம் கொடுமைப்படுத்தப்படுகிறது என்பதையும் அனைத்துலகுக்கும் எடுத்துக் காட்டி விட்டது!

ஆமாம் நண்பா, தமிழாராய்ச்சி மாநாட்டு சம்பவங்களையிட்டு கமிஷன் நியமிப்பதில்லை என்ற அரசாங்கத்தின் கைவிரிப்பு— ஆளுங்கட்சியில் ஒட்டியிருக்கும் தமிழ் அடிமைகளின் கையாலாகாத்தனத்தை—தமிழ் சமுதாயத்தை ஏமாற்றுவதே அவர்களின் தந்திர வேலையென்பதை — தன்மான உணர்வு அவர்களுக்கு கிஞ்சித்தும் கிடையாதென்பதை — திட்டவட்டமாக எடுத்துக்காட்டிவிட்டது!

ஆம்—எத்தனை காலம்தான் ஏமாற்றுவீர் இந்த நாட்டிலே!!

—உன் அன்புத் தோழன்,

**கோவை-மகேசன்.**

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

7 வது திகிலூட்டும் வாரம்!

# செ ன் ட் ர ல்

(மருதானை) 2, 6, 9.30
(ஞாயிறு காலை 10 மணிக்கு)

**ராஜேஸ்வரி**

(மட்டுநகர்) 10.30, 2.30, 6.30, 9.30

சிறந்த இசையமைப்பு சங்கீதம் நகைச்சுவை கலந்த தேன்போல் இனிக்கும் திரைவோவியம்!

முழுக் குடும்பத்தினருக்கும் ஏற்ற நகைச்சுவைச் சித்திரம்



நாகேஷ் விஜயலலிதா எம்.ஆர்.ஆர். வாசு

— நடித்த —

# தே ன் கி ண் ண ம்

(பாஸ்கள் ரத்து)

## செந்தமிழுடன் கலந்த சிக்மரிங்க மாஸ்டர்!



சனவரி 10ம் நாள் இரவு, பொலிசாரின் எதிர்பாராத் தாக்குதலினாலும் கண்ணீர்ப்புகை வீச்சினாலும், இருதய அதிர்ச்சி ஏற்பட்டு, இன்தமிழுக்காக தம் உயிரைத் தந்தவர்களில் யாழ் பரியோவான் கல்லூரி ஆசிரியரான திரு. ஜோன்பிடலிஸ் சிக்மரிங்கம் அவர்களும் ஒருவர்.

சிக்மரிங்க மாஸ்டர் பட்டதாரி ஆசிரியர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நீண்டகால ஆதரவாளர். யாழ் மாநகர மூன்றும் வட்டார மக்கள் குழுத்தலைவராகவும், யாழ்மாவட்ட கூட்டுறவு துறை முகசேவை சமாசங்களின் தலைவராகவும் பரியோவான் கல்லூரி ஆசிரிய சங்கத்தின் தலைவராகவும் விளங்கி வந்தார். சிறந்த பொது நலத்தொண்டர்.

53 வயது நிரம்பப் பெற்ற சிக்மரிங்கம் அவர்கள், தமது எட்டுப் பிள்ளைகளைத் தவிக்க விட்டுவிட்டு தமிழுடன் சங்கமமாகிவிட்டார். அவரது துணைவியார் திரேசா கனகம்மா தன் அன்புக் கணவரைப் பிரிந்து கண்ணீர் வடிக்கிறார்.

அந்தக் கண்ணீர், அவரது மாங்கல்யத்தைப் பறித்த கொடியவர்களை ஒருபோதும் சும்மா விடாதென்பது திண்ணம்

4-வது வெற்றி வாரம்

# செல்ல மகால்

வி. எஸ். தி பிலிம்ஸ் வெளியீடு

நா கே ஷ்



கே. ஆர். வி ஜ யா


சுந்தரராஜன்—விஜய லலிதா நடித்த

# கல்யாண ஊர்வலம்

4-வது வாரம்

# கெயிட்டி

# ஜக்கம்மா



தமிழில் வெளிவரும் முதல் கௌபோய் திரை விருந்து

ஜெய்சங்கர் - சாவித்திரி
உஷா S. V. சுப்பையா
தேங்காய் சீனிவாசன்
மனோரமா

3-வது வாரம் **கிங்ஸ்லி-பிளாசா**
லிடோ (யாழ் நகர்)

முத்துராமன், ஜெயலலிதா, சுந்தரராஜன்,
சாவித்திரி, சோ, மனோரமா, சசிகுமார்,
ஸ்ரீலேகா, M. R. R. வாசு, நடித்தது.

# சூரியகாந்தி



டைரக்ஷன்: சீனிவாசன்

இப்பத்திரிகை கிவோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.